Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இணைந்து விட்டீர்களா?
நிலவு .com in
யாழ் Online
275, யாழ். வீதி,
மானிப்பாய்.
T.P.0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 21 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 23 (06.12.2004) திங்கட்கிழமை இதழ்:67

## புலிகளுடனான போர்நிறுத்த காலத்தில்

# முப்படைகளின் பலத்தை அதிகரித்து

# அரசாங்கம் போருக்குத் தயாராகிறது!



அரசாங்கம் புதிதாகக் கொள்வனவு செய்துள்ள எம்.ஐ. 35 ரக தாக்குதல் போக்குவரத்து ஹெலிகொப்ரர்களில் ஒன்று கட்டுநாயக்க விமானப்படைத்தளத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது.

## அமெரிக்க இராணுவ ஆய்வாளர் தகவல்

(நியூயோர்க்)

2002 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த போர்நிறுத்த காலத்தின் பின்னர் – இலங்கை அரசாங்கம் முப்படைகளினதும் படைப்பலத்தை பலமடங்கு பெருக்கி – விடுதலைப் புலிகளுடன் போரொன்றுக்குத் தயாராகிவருவதாக அமெரிக்காவின் சிரேஷ்ட இராணுவ ஆய்வாளரான பிறையன் புளொட் கெட் தெரிவித்துள்ளார்.

அவர் இலங்கை இராணுவம் தொடர்பாக எழுதியுள்ள Srilanka's military: The search for a Mission என்ற தனது நூலிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க இராணுவ புலனாய்வு அதிகாரியான பிறையன் புளொட்கெட் அமெரிக்க இராணுவத்துடன் இணைந்து பணியாற்றும் ஒரு பேராசிரியராவார். இலங்கையின் படைகள் தொடர்பான வரலாற்று ரீதியான தகவல்களைத் திரட்டியுள்ள இவர் – தனது நூலில் போர்நிறுத்த காலத்துக்குப் பின்னர் அரசபடைகள் தமது படைபலத்தை பெருக்கியுள்ளது குறித்து விரிவாக விபரித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பேபிட்டிய கொலை சந்தேகநபரிடம்

# பொலிஸ் உயரதிகாரிகள் சிலர் மாதாந்தம் 10 லட்சம் லஞ்சம்!

(கொழும்பு)

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலையின் சூத்திரதாரியான போதைப்பொருள் வர்த்தகர் மொஹமட் நஷீர் நௌபர் (பொட்டு நௌபர்) என்பவரிடமிருந்து பொலிஸ் அதிகாரிகள் சிலர் மாதாந்தம் 10 லட்சம் ரூபாவை லஞ்சமாகப் பெற்று வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோருடன் கொழும்பிலும் கொழும்புக்கு வெளியேயும் உள்ள பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் சிலரும் பொட்டு நௌபரிடம் லஞ்சம் பெற்றவர்களின் பட்டியலில் இடம் பெற்றிருப்பதாகத் தெரியவருகிறது.

சந்தேகநபர் கைதுசெய்யப்படுவதற்கு முதல்நாள், உயர்மட்ட அதிகாரியொருவர் அவரைச் சந்தித்து உரையாடி லஞ்சம் பெற்றிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

மற்றுமொரு அதிகாரி, சந்தேகநபரைக் கைதுசெய்தவுடன் குற்றப்புலனாய்வுத்துறையினர் அவரை விசாரிப்பதைத் தவிர்ப்பதற்காக உடனடியாகவே நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தி விளக்கமறியல் உத்தரவைப் பெற்றுள்ளார்.

இந்த விபரங்கள் தற்போது வெளியாகியுள்ளன. இதனைத் தவிர மேலும் சில உயர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் கருத்து அரசினுடையதல்ல; நோர்வேயைச் சமாளிக்கிறார் கதிர்காமர்!

### நிலைமையை பீற்றர்சனுக்கு விளக்கினார்



(கொழும்பு)

நோர்வேயின் மீது இலங்கை அரசாங்கம் நம்பிக்கையிழந்து விட்டதாக ஜே.வி.பி. பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா அனுப்பிய கடிதத்துக்கும் அரசாங்கத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. அது அரசாங்கத்தின் கருத்தல்ல.

நோர்வே அரசாங்கம் தொடர்ந்தும் இனப் பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் ஏற்பாட்டாளராகப் பணியாற்றவேண்டும் என்று இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாகக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சனுடன் தொடர்பு கொண்டு அரசாங்கத்தின் சார்பில் விளக்கமளித்தார்.

நோர்வே தொடர்ந்தும் தனது ஏற்பாட்டாளர் பணியை முன்னெடுக்கவேண்டும் என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் வேண்டுகோளின் படியே வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நோர்வேயுடன் தொடர்புகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளை பாதுகாக்க நோர்வே தூதுவரை அனுப்புகிறது!

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் யுத்தம் ஏற்படாமல் சமாதான முயற்சிகளைப் பாதுகாப்பதற்காக - நோர்வே அரசாங்கம் உயர்மட்டத் தூதுவரை மீண்டும் கொழும்புக்கு அனுப்பவுள்ளதாக மேற்குலக ராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி எ.எவ்.பி. நேற்று செய்தி வெளியிட்டது.

எட்டு நாட்கள் தங்கியிருந்து அரசாங்கம் மற்றும் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளுடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நித்திரைக்குச் சென்ற மாணவன் காலையில் சடலமாக மீட்பு!

வீட்டில் இரவு படுக்கைக்குச் சென்ற யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் விடியற்காலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

யாழ்.பல்கலைக்கழக இந்து மெய்யியல் துறை இரண்டாம் வருட மாணவனும் புதுவளவு நாச்சிகோயில், கரணவாய் வடமேற்கைச் சேர்ந்தவருமான இளையதம்பி கருணா (வயது-25) என்ற மாணவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களை இழுத்தடித்து

# நாட்டை யுத்தத்துக்குள் தள்ளுவதாக அரசாங்கம் மீது ரணில் குற்றச்சாட்டு!

(கொழும்பு)

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் முன்னெடுத்துச் செல்வதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று கொழும்பு மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் 50 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க - நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்கின்ற அர்ப்பணிப்புடன் ஐக்கிய தேசியக் கட்சியே விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களுக்கு அடித்தளம் இட்டது. சமாதானப் பேச்சுக்களும் அர்ப்பணிப்புடன் இடம்பெற்றன.

அப்பொழுது விடுதலைப்புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைதொடர்பான தமது யோசனைகளை எமது அரசாங்கத்திடம் முன்வைத்தனர்.

நாமும் அதனை அடிப்படையாக (12 ஆம் பக்கம் பார்க்க)



# க.பொ.த உயர்தர வகுப்புக்கள் ஜனவரி மாதமே ஆரம்பமாகும்!

(ஆழியவளை)

யாழ்.மாவட்டப்பாடசாலைகளில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் க.பொ.த உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அண்மையில் மாவட்ட மட்டத்தில க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் உயர்தரவகுப்புகளுக்கு மாணவர்கள் அனுமதிக்கப் படவுள்ளதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

டிசெம்பர் மாதம் நடைபெறும் க.பொ.த சாதாரண தரப்பரீட்சைப் பெறுபேறுகள் 2005 ஏப்ரல் மாதமளவிலேயே பரீட்சைத்திணைக்களத்தினால் வெளியிடப்படும். கடந்த காலங்களில் பாடசாலைக ளில் மே மாதமளவிலேயே உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு வந்தன.

ஆனால், தனியார் கல்வி நிலையங்களில் ஜனவரி மாதத்திலேயே உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டுவிடும். இதன்காரணமாக க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தாம் எந்தத் துறையினை உயர்தர வகுப்புக்குத் தெரிவுசெய்வது எனத் தெரியாமல் பொருத்தமற்ற துறையினைத் தெரிவுசெய்து பாதிப்பு அடைந்த வரலாறுகளும் உண்டு. இதனைக் கருத்திற்கொண்டே மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற முன்னோடிப் பரீட்சையின் அடிப்படையில் க.பொ.த உயர்தர வகுப்புக்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (122)

**மோட்டார் சைக்கிள் திருட்டு**

கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள மதுபானக் கடையொன்றின் முன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கொண்டா - 50 எனும் இனத்தையுடைய மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் திருடப்பட்டுள்ளது. இது தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (82)

## மூத்த எழுத்தாளர் கே.வி.நடராஜன் நேற்று காலமானார்



(யாழ்ப்பாணம்)

அளவெட்டியைச் சேர்ந்த மூத்த எழுத்தாளர் கே.வி.நடராஜன் நேற்றுக் காலமானார்.

இவர் 150 க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதிய முற்போக்குச் சிந்தனையாளர். யாழ்ப்பாண கதைகள் என்னும் சிறுகதைத் தொகுதி ஒன்றை இலங்கையிலும், வேலி என்னும் சிறுகதைத் தொகுதியை இந்தியாவிலும் வெளியிட்டுள்ளார். அத்துடன், பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் வெளியிடப்பட்ட கற்பகம் என்னும் பத்திரிகையை நடத்தியவர். வடகிழக்கு மாகாண சபையால் வறுமையான எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தையும் பெற்றதுடன், ஆற்றல் வாய்ந்த படைப்பாளி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வீதியை மேவி வெள்ளம் பாய்வதால் ஊர்காவற்துறை போக்குவரத்து பாதிப்பு!

வேலணை - ஊர்காவற்துறைப் பிரதான வீதி உட்பட தீவகத்தின் பல வீதிகளும் கடும்சேதம் அடைந்துள்ளன. தற்போது பெய்துவரும் மழைகாரணமாக வெள்ளம் இவ் வீதிகளை மேவிப் பாய்வதால் வேலணை ஊடான ஊர்காவற்துறைக்கான போக்குவரத்துக்கள் யாவும் நேற்று முன்தினம் முதல் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால், இந்த வீதிவழியாக ஊர்காவற்துறைக்குச் சேவையில் ஈடுபடும் தனியார் சிற்றூர்திகள் உட்பட போக்குவரத்துச் சபைப் பேருந்துகள் எவையும் சேவையில் ஈடுபடவில்லை. இவை மாற்று வழியூடாக சேவையில் ஈடுபடுவதால் வேலணை, அம்பிகைநகர், அருவில், புளியங் கூடல் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் பஸ் சேவையைப் பெற்றுக்கொள்ளப் பெரும் இடர்களை எதிர்கொள்கின்றனர். இதனால், நீண்டதூரம் நடந்தே மக்கள் பஸ் சேவையைப் பெறவேண்டியுள்ளது.

எனவே, இவ் வீதியைத் திருத்தித் தரும்படி பல தரப்புக்களால் கோரிக்கை விடப்பட்டும், இந்த வீதி திருத்தப்படாமையே இந்நிலைக்குக் காரணம் எனவும், இதனைக் கண்டித்து தீவக வீதிகளை மறித்து மறியல் போராட்டம் ஒன்றில் ஈடுபட அப்பகுதி மக்கள் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இங்குள்ள சிறு வீதிகள், குடிமனைகள் என்பனவும் சில இடங்களில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் மக்கள் தமது அன்றாட வாழ்வில் பெரும் இடர்களை எதிர்கொள்கின்றனர். (99)

## பட்டதாரிப் பயிலுனர்களின் இறுதி ஒன்றுகூடல் நிகழ்வு !

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரி பயிற்சி நிலையப் பட்டதாரிப் பயிலுனர்களின் இறுதி ஒன்றுகூடல் நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

பட்டதாரிப் பயிலுனர் என்.ஜெயசுரேஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட அரச அதிபர் எஸ். பத்மநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் பட்டதாரிப் பயிலுனர்களுக்கு விரிவுரைகளை நிகழ்த்திய வளதாரிளைக் கௌரவித்தலும் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



சண்டிலிப்பாய் பாரதி முன்பள்ளியில் அண்மையில் இடம்பெற்ற விளையாட்டுப்போட்டி நிகழ்வில் வெற்றிபெற்ற சிறுமி ஒருவருக்கு மானிப்பாய் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிப் பொது முகாமையாளர் க.சுதர்சன் பரிசினை வழங்குவதைக் காணலாம். (48)

## உரும்பிராயில் தேடுதல் பெருமளவான கசிப்பு மீட்பு!

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய்ப் பகுதியில் கசிப்பு உற்பத்திசெய்யும் இடம் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு பெருமளவு கசிப்பு மீட்கப்பட்டது.

உரும்பிராய் கிழக்கில் பெருமளவு கசிப்பு உற்பத்திசெய்து விற்பனை செய்யப்பட்டு வருவதாக கோப்பாய் பொலிஸாருக்கு பொதுமக்கள் தகவல் கொடுத்ததையடுத்து -

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தலைமையிலான பொலிஸார் உரும்பிராயில் நடத்திய தேடுதல் வேட்டையின்போது பெருமளவான கசிப்பு மீட்கப் பட்டதுடன் உற்பத்தியில் ஈடுபட்ட குடும்பஸ்தரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

இதன்போது, 39 டிராம் கசிப்பு, 3640 டிராம் கோடா மற்றும் 4 பரல்கள் ஒரு 1/4 பரல் பிளாஸ்ரிக் பீப்பா, 2 செப்புச் சுருள்கள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றைக் கைப்பற்றியுள்ளனர். கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான அருணகிரி ஸ்ரீசெல்வம் தலைமையில் சென்ற குழுவினரே இந்தக் கசிப்பு உற்பத்தி நிலையத்தைக் கண்டுபிடித்துக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (82)

## அனுமதியட்டை வழங்கல்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஊடாக க.பொ.த சா.தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதியட்டை வழங்கும் வைபவம் அதிபர் இ.இராசதுரை தலைமையில் இன்று நண்பகல் 12 மணிக்கு மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வு மாதா, பிதா குரு தெய்வம் என்ற தொனிப்பொருளில் தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி நடைபெறும் இந்த நிகழ்வுக்கு மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர்.


**தேவை**

தாதி வேலை தெரிந்த, பழக விரும்பும் பெண்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு 0776. 237956, 0777.592587 (சி/3438)



**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.

இன்று முதல் (குளிரூட்டப்பட்டது)

இலங்கையில் முதன்முறையாக வெளியிடப்படும் திரைப்படம்

இளைய தளபதி விஜய், சங்கவி நடித்த

**கோயம்புத்தூர் மாப்பிள்ளை** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 10.30.2.30. 6.30. 9.30 (பு.நே) (சி-3319)

**நிறைஞ்சனைஸ்** சங்கானை

விஜயகாந், சமீதாரெட்டி நடித்த

**ராஜ்ஜியம்** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

**VANHELSING** (ரகுல படம்) (சி-2723)

**ராஜா** யாழ்ப்பாணம்.

5 முதல் 9 வரை

சிறுவர்களுக்கான சிறந்த ஆங்கிலச் சித்திரம்.

**SPIDERMAN-2**

புதிய நேரம்: 10.30. இரவு 9.30, மட்டும்

ஸ்ரீகாந், சினேகா, கலாபவன்மணி நடித்த

**போஸ்**

புதிய நேரம்: 2.30. 6.30. மட்டும் (ரீல்ஸ்) (சி-3319)

**நாகம்ஸ்** சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான

P.S.சௌத்திரியின்

சரத்குமார், நக்மா, வடிவேல் நடித்த

**சத்ரபதி**

கா.நே. - 11.00, 3.00, 7.00



**அரியாலை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

காரியாலய கட்டடம் புனரமைப்பு

கூலி ஒப்பந்தத்துக்கான கேள்விகள்

இல 15 நடுத்தெரு லேன் கண்டிவீதி, அரியாலையில் உள்ள மேற்படி சங்கத்தின் தலைமைக் காரியாலயக் கட்டட புனரமைப்புத் தொடர்பாகக் கீழ்வரும் வேலைகளைச் செய்து தருவதற்கான கேள்விகளைத் துறைசார் வல்லுநர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

1. கட்டடப் பொருட்களைச் சேதமின்றி அப்புறப்படுத்தி சுண்ணாம்புச் சுவர்களை இடித்துத் துப்புரவு செய்தல்
2. மேசன் வேலை
3. தச்சு வேலை [கண்ணாடிப் பாட்டிசன் உள்ளிட்ட]
4. வயறிங் வேலை
5. பெயின்ரிங் வேலை

இவ்வேலைகளுக்கான கேள்விகளைத் தனித்தனியாக 17.12.2004 இற்கு முன்னர் பொதுமுகாமையாளர் அரியாலை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இல 15 நடுத்தெரு லேன் அரியாலை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் சம்பந்தப்பட்ட வேலைக்கான கேள்வி விலை எனக் குறிப்பிடப்படவேண்டும். உரிய வேலை விபரங்களை காரியாலய கடமை நேரங்களில் வந்து பார்வையிடலாம்.

ச.புஸ்பராஜா
பொது முகாமையாளர்

4.12.2004 (சி/3439)


## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 15 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்!



(யாழ்ப்பாணம்)

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 15 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை யாழ். வர்த்தக வங்கியில் சிறப்புற நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய வர்த்தக வங்கியின் முகாமையாளர் ரவீந்திரன சிறுவர்களின் எதிர்காலம் சிறப்புற அமைய வேண்டுமென்றும் -

அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவக் கூடியதுமான இந்தப் பரிசினை வழங்குகின்றோம் என்றும் தெரிவித்தார்.

உரைநிகழ்வு முடிந்ததும் அருணலு சிறுவர் சேமிப்பு திட்டத்தின் மூலம் வர்த்தக வங்கியில் சேமிப்பினை மேற்கொள்ளும் சிறுவர்களில் -

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவ மாணவிகளில் 15 பேரினை தெரிவுசெய்து பரிசுத் தொகையாக 5 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய காசோலை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிள்ளைகளின் பெற்றோர்கள் வங்கியாளர்கள் போன்றோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# சமாதானத்துக்கெதிரான சக்திகளை எதிர்க்க மூவின மக்களும் அணி திரள வேண்டும்

## திருமலை மாவட்ட பொது அமைப்புக்கள் கோரிக்கை

(திருகோணமலை)

**மீண்டுமொரு யுத்தக் காற்று எம்மண்ணில் வீசத்தொடங்கிவிட்டது. மீண்டும் சந்தேகங்களும், அவநம்பிக்கைகளும் தோன்றிவிட்டன. கடந்த மூன்று வருடங்களாக நீடித்திருக்கும் யுத்த நிறுத்தம் மூவின மக்கள் மத்தியிலிலும் என்றுமில்லாதவாறு நம்பிக்கையைக் கட்டியெழுப்பியது. பாகுபாடில்லாமல் கொடிய யுத்தம் ஒன்றின் முடிவை சகல மக்களும் கொண்டாடினர். ஆனால் எல்லாமே கனவாகி விட்டதோ என நாம் அச்சப்படுகின்றோம்.**

யுத்தம் ஓய்ந்து சமாதானக் காற்று வீசும் காலத்தில் அவ்வப்போது இடம்பெறும் சமூக மோதல்களும் அப்பாவி மக்களும் உயிரிழப்புக்களும் மிகுந்த வேதனைக்கும், ஆதங்கத்துக்கும் உரியதாகும்.

இவ்வாறு இலங்கைச் செஞ் சிலுவைச் சங்கத்தின் திருகோண மலைக் கிளையினர், அபிவிருத்திக்கும் புரிந்துணர்வு முன்னேற்றத்திற்கான இளைஞர் அணி, சமூக மாற்றத்திற்கான நடவடிக்கை அணி, சமூ அபிவிருத்தி ஆய்வு நிறுவனம், நஷனல் விஷன், கிழக்கு வள அபிவிருத்தி மையம், சக வாழ்வு அமையம், சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு என்பன இணைந்து கூட்டாக வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக யுத்த காலத்தில் எமது மாவட்டத்தில் இடம்பெற்ற அப்பாவி மக்கள் மீதான உயிர் கொலைகளும், வன்முறைச் சம்பவங்களும் மிகுந்த மனவேதனைக் குரியதாகும். சமீப காலத்தில் இடம் பெற்ற மூதூர், கிண்ணியா - நடு ஊற்று, அன்புவழிபுரம் போன்ற பகுதிகளில் இடம்பெற்ற அப்பாவி மக்களின் உயிரிழப்புக்களும், சொத்தழிப்புக்களும் எந்த வழியிலும் நியாயப்படுத்தக்கூடியவை அல்ல.

இந்த அடிப்படையில் தான் கடந்த 26, 27, 28 ஆம் திகதிகளில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களையும், அதன் உச்சமாக இடம்பெற்ற உயிரிழப்புக்களையும் பார்க்கின்றோம். இவ்வாறான சம்பவங்கள் நீடிப்பது சமூகங்களின் மத்தியிலிருந்து சமாதானம் குறித்த நம்பிக்கையை முற்றாக சிதைத்து விடும் அபாயமுள்ளது.

ஒவ்வொரு சமூகத்திற்கும் தங்களது தனித்துவங்களையும், அரசியல் கோரிக்கைகளை வெளியிடுவதற்கான உரிமையையும் நாம் மதிக்கின்றோம். ஆனால் அப்பாவி மக்களின் மீதான தாக்குதல்களாலும், உயிரிழப்புக்களாலும் எதையும் சாதித்துவிட முடியாது. ஆகவே, ஒவ்வொரு சமூகத்திற்கும் இவ்வாறான சம்பவங்களை தடுத்து நிறுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு உண்டு.

அறியாமையாலும் உணர்ச்சி வசத்தாலும் தோன்றும் இவ்வாறான சம்பவங்களை சமாதானத்திற்கு எதிரான தீய சக்திகள் பயன்படுத்திக்கொள்ளும் அபாயம் உள்ளது. இனிவரும் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதே திருகோணமலை வாழ் மூவின மக்களின் எதிர்காலக் கடமையாகும். நாம் உங்களிடம் மட்டுமே இதனைச் சொல்ல முடியும் என அந்தச் துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.(04)

# நீதித்துறையின் குறைபாடுகளாலேயே நாட்டில் லஞ்ச ஊழல்கள் அதிகரிப்பு!

## ட்ரான்ஸ் பரன்ஸி இன்ரநஷனல் தெரிவிப்பு

(கொழும்பு)

நீதித்துறையில் காணப்படுகின்ற குறை பாடுகள்தான் நாட்டில் லஞ்ச ஊழல்கள் அதிகரிப்பதற்குக் காரணம் என்று ட்ரான்ஸ் பரன்ஸி இன்ரநஷனல் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ட்ரான்ஸ் பரன்சி இன்ரநஷனல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.ஏ. வெலியமுன மேலும் தெரி வித்ததாவது -

இலங்கையில் ஊழல்களைத் தடுக்க உரிய முனைப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்த நிலையில் எதிர்வரும் வியாழக்கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் ஊழல்களுக்கு எதிரான தினம் அனுஷ்டிக்கப்படு வதை முன்னிட்டு, பொதுமக்களுக்கு தெளிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கையில் ஊழல்களைக் கட்டுப்படுத்தும் முகமாக அமைக்கப்படுகின்ற அமைப்புகள் யாவும் நிச்சயமற்றவையாகவே காணப்படுகின்றன.

குறிப்பாக ஊழல்களைத் தடுக்கும் ஆணைககுழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் மூவருமே அரசாங்க சேவையில் இருந்து இளைப்பாறியவர்களாவர்.

இந்த நிலையில் அவர்களால் எவ்வாறு அரசாங்கத் திணைக்களங்களில் இடம்பெறும் ஊழல்களைத் தடுக்கமுடியும்.

இலங்கையும், ஊழல்களைத் தடுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச இணக்கப்பாட்டில் கையெழுத்திட்டுள்ளது. எனவே இலங்கையிலும் ஊழல்களைத் தடுக்கும் உரிய முனைப்புகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று அவர் தெரிவித்தார். (01)

# தாய்லாந்துடன் பாதுகாப்பு உடன்பாடு: பேச்சு நடத்த ஜனாதிபதி செல்வார்!

(கொழும்பு)

இந்திய - இலங்கை உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு பல்வேறு தரப்பிலுமிருந்து பாரிய எதிர்ப்பு கிளம்பியுள்ள வேளையில், தாய்லாந்துடனும் பாதுகாப்புக் கூட்டுறவு பற்றிக் கலந்துரையாடி, இணக்கப்பாடு காண்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த மாத இறுதிப்பகுதியில் தாய்லாந்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அந்தநாட்டு பிரதமர் தக்சின் சினவத்ரவைச் சந்தித்து இந்தப் பாதுகாப்புக் கூட்டுறவு விவகாரம் குறித்தும் பேசவுள்ளார் எனத் தெரியவருகிறது.

இதேவேளை, அடுத்த மாத ஆரம்பத்தில் பங்களாதேஷுக்கும் அடுத்த மாத இறுதியில் பாகிஸ்தானுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

# அம்பேபிட்டிய கொலை சூத்திரதாரியான நௌபரே ஆயுதங்களை வழங்கினார்

## விசாரணைகளில் பொலிஸார் தெரிவிப்பு

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய மற்றும் அவரது மெய்ப் பாதுகாவலரான இன்ஸ்பெக்டர் ஆர்.எ.உபாலி கொலையுடன் தொடர்புடையவரெனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மொகமட் நியாஸ் நௌபர் கொள்ளுப்பிட்டியில் கடந்த ஒக்ரோபர் 11 ஆம் திகதி இடம்பெற்ற நாமல் குணவர்த்தனவின் கொலையுடனும் தொடர்புடையவரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதாள உலகக் குழுத் தலைவர்களில் ஒருவரான இவர், குற்றச் செயல்களை ஒருங்கிணைப்பதில் முன்னின்று செயற்படுபவரெனவும், போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவரெனவும் கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு நீதிமன்றில் பொலிஸார் இவரை ஆஜர்படுத்தியவேளை, எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறிய லில் வைக்குமாறு நீதிவான் சரோஜினி குசல வீரவர்த்தன உத்தரவிட்டார். சந்தேகநபரான இவரைப் பாதுகாப்பின் நிமித்தம் வெலிக்கடை சிறைச்சாலைக்கு அனுப்பாமல், களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்க அனுமதிக்க வேண்டுமெனக் குற்றத்தடுப்புப் பிரிவினர் நீதிபதியிடம் கேட்டுக் கொண்டனர்.

இது தொடர்பாகக் குற்றத் தடுப்புப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் எ.எஸ்.பி.ஜே.ஆர்.ஜெயவர்த்தன தெரிவித்திருப்பதாவது -

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலையின் பிரதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்ட நௌபர் ஆவார். அத்துடன் போதைப்பொருள் வணிகம் தொடர்பாகவும் இவர்மீது தனியான விசாரணை இடம்பெற்று வருகிறது.

முதலாவது மற்றும் இரண்டாவது சந்தேக நபர்களுக்கு, நீதிபதியையும், அவரது மெய்ப்பாதுகாவலரையும் கொல்லுமாறு ஆயுதங்களை வழங்கியதும் நௌபர்தான் எனத் தெரிவித்தார்.

நௌபர் கொலைசெய்த பல சம்பவங்களை நேரில் கண்ட சாட்சிகளுக்கும், தற்போதைய நீதிவானது கொலைச் சம்பவத்தைக் கண்ட சாட்சிகளுக்கும் இவரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால், தன்னைக் கைது செய்து சிறையிலடைத்தபின்னர் பொலிஸார் தன்னைத் துன்புறுத்துவதாகவும், தான் களுத்துறைச்சிறையில் இருக்கும்வேளை பல் அச்சுறுத்தலைப் பெற்றதாகவும், எனவே தன்னை அங்கு அனுப்பவேண்டாமெனவும் நௌபர் நீதிபதியிடம் தெரிவித்தார்.

நீதிவானின் கொலை தொடர்பாக சந்தேகநபர் தனது வாக்குமூலத்தை அடுத்த திகதியில் தெரிவிக்கவேண்டுமென்ற நீதிவான், சந்தேகநபரின் கை, கால்விரல் அடையாளங்களைப் பதிவுசெய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# போலிச்சாமியார் மீது பாலியல் குற்றச்சாட்டு



இந்தியாவில் சர்ச்சைக்குரிய விவகாரமாக மாறியுள்ள சாமியார் பிரச்சினை இலங்கைக்கும் பரவி விட்டது. வருங்காலத்தின் பலாபலன்களை சரியாகக் குறிப்பறிந்து சொல்வதாகக் கூறிக்கொண்டு, இலங்கைக்கு வந்து திருவிளையாடல் புரிந்த இந்தியாவைச் சேர்ந்த கிஷோர் சாஸ்திரி என்ற போலிச் சாமியார் - பாலியல் குற்றச்சாட்டின் பேரில் கையும் களவுமாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த கிஷோர் சாஸ்திரி என்ற இந்தச் சாமியார் ஒருவரது படத்தை வைத்தே பூர்வீகமும் சொல்வதாகக் கூறி ஏமாற்றி வந்துள்ளார். எதிர்காலப் பலன்கள் பிரகாச மான வாழ்க்கைக்கு என்ன செய்ய வேண்டும், பரீட்சையில் சித்தி ஆகிய வற்றுக்கு வழிகாட்டுகிறேன் வாருங்கள் என்று இலங்கையின் பிரபல பத்திரிகைக ளில் எல்லாம் விளம்பரம் கொடுத்து, இலங்கையின் பிரபல ஹோட்டல் அறையொன்றைத் தனது தொழிலிடமாகப் பயன்படுத்தி வந்துள்ளார்.

இவரிடம் ஜோதிடம் பார்க்கச் செல்வதானால் தொலைபேசியில் தொடர்புகொண்டு முற்பதிவை மேற்கொள்ளவேண்டும். இதற்கு ஆயிரத்து இருநூறு ரூபா அறவிடுவார். பின்னர் ஜோதிடச் செலவு வருபவர்களின் வருமானத்தைப் பொறுத்து 10 ஆயிரம் ரூபா முதல் முதல் 20 ஆயிரம் ரூபா வரை அறவிடுவார்.

தன்னிடம் வரும் பெண்களை தமது நண்பர்கள் அல்லது உறவினருடன்தான் வரச்சொல்லி, அவர் பூஜையை ஆரம்பித்தவுடன் அவர்களையும் தனது மொழி பெயர்ப்பாளர்களையும் வெளியே அனுப்பிவிட்டு, அதன் பின்னர் எலுமிச்சம் பழத்தை பெண்களின் வயிற்றில் தேய்த்து, வல்லுறவுக்கு முயற்சி செய்வாராம்.

இவரிடம் ஜோதிடம் பார்க்கச் சென்ற பெண்ணொருவர் - தன்னை சாமியார் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திவிட்டார் என்று கொம்பனி வீதி பொலீஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இதை அடுத்து உஷாரான பொலிஸார் தந்திரமாகக் காய்களை நகர்த்தினர்.

பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை பிரஸ்தாப சாமியாரிடம் ஜோதிடம் கேட்பவர்போல அனுப்பத்திட்டமிட்டனர். அதன்படி பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை சாமியார் இருந்த குறிப்பிட்ட ஹோட்டல் அறைக்குள் அனுப்பிவிட்டு, வெளியே தமது குழுவுடன் தயாராக நின்றனர். உள்ளே சென்ற பெண் பொலிஸிடமும் - ஆள் யாரெனத் தெரியாமல் தனது வழமையான திருவிளையாடலை காண்பிக்க முயற்சித்துள்ளார் சாமியார். வெளியே ஆயத்தமாக நின்ற தனது குழுவினருக்குப் பெண் பொலிஸார் தகவல் கொடுக்க, அறையினுள் பாய்ந்த பொலிஸார் சாமியாரைக் கையும் களவுமாகக் கைது செய்தனர்.

இவர் ஏற்கனவே ஒரு தொழிலதிபரின் மனைவி மற்றும் இராணுவ அதிகாரியின் மனைவி ஆகியோர் மீதும் இவ்வாறு நடந்து கொள்ள முயற்சித்துள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொம்பனி வீதிப் பொலிஸார் சாமியாரைக் கொழும்பு கோட்டை பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். இவரை 6 நாள் பொலிஸ் காவலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியாவில் அண்மையில் காஞ்சி ஜெயந்திரர் கொலைக் குற்றச்சாட்டின் பேரிலும், சதுர்வேதி சுவாமிகள் என்பவர் பாலியல் குற்றச்சாட்டின் பேரிலும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### வெளிநாட்டிலிருந்து திரும்பிய

# நண்பரை அழைத்துவரச் சென்ற 7 இளைஞர்கள் வெலிக்கடையில்!

வெளிநாட்டிலிருந்து திரும்பிய நண்பரை ஏற்றி வருவதற்காக வானொன்றில் கொழும்புக்குச் சென்ற ஏழு இளைஞர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு - வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ஐரோப்பிய நாட்டிலிருந்து திரும்பிய தமது நண்பரை வரவேற்று, அழைத்து வருவதற்காகப் பருத்தித்துறை முனைப் பகுதியைச் சேர்ந்த ஏழு இளைஞர்கள் கடந்த 30 ஆம் திகதி கொழும்புக்குச் சென்றிருந்தனர்.

வாடகைக்கு அமர்த்திய ஹையேஸ் வானில் சென்ற இவர்கள்- வெளிநாட்டிலிருந்து திரும்பிய இளைஞரை வரவேற்கச் செல்ல வில்லை.

இதனால், குறித்த நண்பர் இது தொடர்பாகப் பருத்தித்துறையிலுள்ள உறவினர்களுடன் தொடர்பு கொண்டு விசாரித்த போதே, இந்த இளைஞர்கள் காணாமற்போன தகவல் தெரியவந்தது. இந்த இளைஞர்கள் பயணம் செய்த ஹையேஸ் வான் தற்செயலாக, வழிதவறி கொழும்புத் துறைமுக உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் பிரவேசித்த போது, கடற்படையினர் இவர்களைக் கைது செய்தனர்.

இவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு - கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது, இந்த இளைஞர்களைத் தடுத்து வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. இதனையடுத்து இவர்கள் வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை கொழும்புப் பொலிஸார் பருத்தித்துறை இராணுவ முகாமிற்கு அனுப்பியுள்ளனர்.

# அவுஸ்ரேலியாவுடனான முதல் போட்டி
# நியூசிலாந்து அணிக்கு அபார வெற்றி



அவுஸ்ரேலிய - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் மெல்பேர்னில் நடந்த முதலாவது டெஸ்ட்போட்டியில் நியூசிலாந்து நான்கு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இந்த ஒரு நாள் தொடரில் நேற்று நடந்த முதல் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணித்தலைவர் பிளெமிங் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

இதனையடுத்து அவுஸ்ரேலியா துடுப்பெடுத்தாடியது. அந்த அணி சார்பாக கில்கிறிஸ்ட் - ஹைடன் ஜோடி களமிறங்கியது. இதில் கில்கிறிஸ்ட் தனது வழமையான அதிரடித் தாக்குதலை நடத்திய அதே வேளை ஹைடன் நிதானமாக ஆடியபோதும் அவர் 21 பந்துகளில் 13 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஓரத்தின் பந்துவீச்சில் சின்கிளெயர் அருமையான பிடி ஒன்றைப் பிடித்ததன் மூலம் ஆட்டமிழந்தார். அவ்வேளை அணியின் எண்ணிக்கை 64 ஆக இருந்தது.

இதன் பின்னர் கில்கிறிஸ்டுடன் அணித்தலைவர் பொண்டிங் இணைந்தார். இவர்கள் இருவரும் அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்துக்கொண்டிருந்தவேளை கில்கிறிஸ்ட் 54 பந்துகளில் 9 பவுண்டரிகள் உட்பட 68 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஹெயின்சின் பந்துவீச்சில் போல்டானார்.

இவரது ஆட்டமிழப்பின் பின்னர் டரன் லீமன் இண்ணைந்தார். ஆனால் அணித் தலைவர் பொண்டிங் 49 பந்துகளில் 4 பவுண்டரிகள் உட்பட 29 ஒட்டங்களைப் பெற்றிருக்கையில் விற்றோரியின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அவ்வேளை அணியின் எண்ணிக்கை 121 ஆக இருந்தது.



இதன் பின்னர் லீமனுடன் இணைந்த மார்ட்டின் ஒரு ஓட்டத்துடனும், சைமன்ஸ் ஓட்டமெதுவும் பெறாமலும் விற்றோரியின் சுழலுக்கு இரையாகினர். அவுஸ்ரேலிய அணி 123 ஓட்டங்களிலேயே இரண்டு விக்கெட்டுக்களை இழந்தது.

இதன் பின்னர் லீமனுடன் கிளார்க் இணைந்தார். இவர்கள் இருவரும் 6ஆவது விக்கெட்டுக்காக 71 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். இதில் கிளார்க் 49 பந்துகளில் 2 பவுண்டரிகள் உட்பட 36 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஹெயின்சின் பந்துவீச்சில் போல்டாகி வெளியேறினார்.

இதன் பின்னர் பிரட் ஹொக் இணைந்தார். அவரும் 3 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பட்லரின் பந்தில் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் லீமன் 73 பந்துகளில் 2 பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஓரத்தின் பந்தில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் வட்சன் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களுடனும், கஸ்பரோவிச் 9 ஓட்டங்களுடனும் இருக்க 50 ஓவர்கள் நிறைவில் அவுஸ்ரேலியா 9 விக்கெட் இழப்பிற்கு 246 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக விற்றோரி 3 விக்கெட்டுக்களையும் ஓரம், ஹெய்ன்ஸ ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதன் பின்னர் 247 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூஸிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக இருந்தது. அவ்வணியின் தலைவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரருமான பிளெமிங் 2 பந்துகளைச் சந்தித்து ஓட்டம் எதனையும் பெறாமல் பிரட்லீயின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் அஸ்ரிலுடன் சிங்கிளெயர் இணைந்தார். இவர்கள் இருவரும் இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டமாக 128 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். இதில் சிங்கிளெயர் 86 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 48 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ரன் அவுட்டானார். ஆனாலும் அஸ்ரிலுடன் ஸ்ரைரிஸ் இணைந்தபோதும் அஸ்ரில் 102 பந்துகளில் 1 சிக்சர், 3 பவுண்டரிகள் அடங்கலாக 70 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் லீமனின் பந்தில் பொண்டிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் ஆட்டமிழந்து சிறிது நேரத்திலேயே ஸ்ரைரிஸ் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இவ்வேளை நியூஸிலாந்து அணி 140 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து தவித்தது. ஆனாலும் மார்ஷலும் ஓரமும் இணைந்து ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தவேளை ஓரம் 22 பந்துகளில் 2 பவுண்டரிகள் அடங்கலாக 24 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் கஷ்பரோவிச்சின் பந்துவீச்சில் கில்கிறிஸ்ரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதன் பின்னர் வந்த ஹெயின்ஸும் 11 பந்துகளில் 1 பவுண்டரி அடங்கலாக 14 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் பிரட்லீயின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். ஆனாலும் மார்ஷலுடன் மக்கலம் இணைந்தவேளை 48ஆவது ஓவரில் கஷ்பரோவிச் பந்துவீச வந்தார். இவரது அந்த ஓவரில் மக்கலம் 3 பவுண்டரிகள் விளாசியதுடன் மொத்தமாக 22 ஓட்டங்களும் பெறப்பட்டது. இதுவே நியூஸிலாந்தை வெற்றிக்கும் இட்டுச் சென்றது.



இறுதியில் 49.4 ஓவரில் நியூஸிலாந்து 6 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மார்ஷல் 52 பந்துகளில் 1 பவுண்டரியுடன் 52 ஓட்டங்களையும் மக்கலம் 13 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 20 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பிரட்லீ மற்றும் லீமன் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் கஷ்பரோவிச் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இரண்டாவது போட்டி சிட்னியில் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது.

## விளையாட்டு

# பணவெறியால் குரோன்ஞே சூதாட்டங்களில் ஈடுபட்டார்!

## தென்னாபிரிக்க வீரர் ஹரி கேஸ்ரன்



பணவெறியால் ஹன்சி குரோன்ஞே சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்று மூத்த வீரர் ஹரி கேஸ்ரன் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 1999 ஆம் ஆண்டு இந்தியா வந்தபோது சூதாட்ட பிரச்சினை பூதாகரமாக வெடித்தது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தனிப்பட்ட முறையில் விசாரணை நடத்தியது. இந்த விசாரணையில் தரகரிடம் இருந்து லஞ்சம் பெற்றதை குரோன்ஞே ஒத்துக்கொண்டார். இதையடுத்து அவருக்கு ஆயுள்தடை விதிக்கப்பட்டது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு விமான விபத்தில் குரோன்ஞே மரணம் அடைந்துவிட்டார். அவரின் மறைவுக்குப்பின்னர் சூதாட்ட விவகாரமும் மண்ணோடு புதைந்தது.

இந்தநிலையில் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் மூத்த வீரரும், குரோன்ஞேவின் நெருங்கிய நண்பருமான ஹரி கேஸ்ரன் மீண்டும் சூதாட்டப் புயலைக் கிளப்பியுள்ளார். கேஸ்ரன் காசா என்ற பெயரில் சுயசரிதை எழுதி வருகிறார். இந்தப் புத்தகத்தில் இதுவரை சூதாட்டப் பிரச்சினையில் வெளிவராத பல தகவல்களைக் கேர்ஸ்ரன் குறிப்பிட்டுள்ளார்.

கப்டன் குரோன்ஞே ஒட்டுமொத்த தென்னாபிரிக்க அணியையும் சூதாட்டத்தில் ஈடுபடுத்த முயன்றார் என்றும், அவரின் பணவெறிதான் அவரைச் சூதாட்டத்தில் ஈடுபடச் செய்தது என்றும் கேஸ்ரன் அதில் குறிப்பிட்டுள்ளார்.

1996 ஆம் ஆண்டு மும்பையில் ஒருநாள் போட்டி ஒன்று நடந்தது. இந்த ஆட்டத்துக்கு முன்பாக வீரர்கள் அனைவரையும் குரோன்ஞே தனது அறைக்கு அழைத்தார். இந்த ரகசிய கூட்டத்துக்கு பயிற்சியாளர் பொப் வூல்மர் அழைக்கப்படவில்லை.

நடக்க இருக்கும் ஆட்டம் பற்றி விவாதிக்கப் போகிறார் என்ற ஆர்வத்தில் வீரர்கள் அனைவரும் காத்திருந்தோம்.

ஆனால் அப்போதுதான் அவர் சூதாட்டம் பற்றி வெளிப்படையாகப் பேச ஆரம்பித்தார். நாளை நடக்கும் போட்டியில் நாம் தோற்க வேண்டும். ஒவ்வொரு 5 ஓவருக்கும் நாம் எடுக்கவேண்டிய ஓட்டங்கள், இழக்கவேண்டிய விக்கெட் பற்றி குரோன்ஞே தெளிவாகப் பேசினார். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க நான் நினைத்தேன். ஆனால் என்னால் முடியவில்லை.

தொடர்ந்து அவரின் பேச்சை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தேன். அவரின் கோரிக்கைப்படி நடந்த போட்டியில் நான்தான் முதலில் ஆட்டம் இழக்கவேண்டும். என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் நான் மிகவும் வேதனை அனுபவித்த நாள் அதுதான். குரோன்ஞே தனது வாழ்க்கையை சொகுசாக அனுபவிக்க அதிகம் ஆசைப்பட்டார். இதன் உச்சக்கட்டமாகத்தான் சூதாட்டத்தின் பிடியில் அவர் சிக்கினார். கடைசிவரை அதில் இருந்து அவர் மீளவில்லை என்பது துயரம்.

இதுபோன்று இன்னும் பல்வேறு தகவல்களை கேஸ்ரன் தனது புத்தகத்தில் தெளிவாகக் கூறியுள்ளார். கிரிக்கெட் பொறுப்பாளர் பலரும் சூதாட்டம் இல்லை என்று மறுத்தாலும், கறைபோல் படிந்திருக்கும் சூதாட்டத்தை யாரும் ஒழிக்க முடியாது என்பதற்கு இது ஒன்றே சாட்சி.

கேஸ்ரன் குறிப்பிட்டுள்ள 96 ஆம் ஆண்டு மும்பை ஒருநாள் போட்டியில் இந்தியா 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவைத் தோற்கடித்தது. முதலில் இந்தியா 267 ஓட்டங்கள் எடுத்தது. டெண்டுல்கர் சதம் அடித்தார். பின்னர் களம் இறங்கிய தென்னாபிரிக்கா 193 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. கேஸ்ரன் (1), குரோன்ஞே (10) ஓட்டங்கள் எடுத்தனர்.

# 3ஆவது போட்டியிலும் தோல்வியடைந்து தொடரை இழந்தது சிம்பாப்வே அணி



சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் தொடரை இங்கிலாந்து அணி 3-0 என்ற முன்னணியில் கைப்பற்றியது. நேற்றுமுன்தினம் நடந்த மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் சிம்பாப்வே தோல்வி அடைந்தது.

பல்வேறு பிரச்சினைகளுக்குப் பிறகு இங்கிலாந்து கிரிக்கெட் அணி, சிம்பாப்வே சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இங்கிலாந்து அணி 2-0 என்ற முன்னிலை பெற்றிருந்த நிலையில், மூன்றாவது போட்டி புலவாயோ நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தப்போட்டியிலும் தோல்வி அடைந்தால், சொந்த மண்ணில் தொடரை இழக்கக் கூடிய நெருக்கடியில் களமிறங்கியது சிம்பாப்வே. நாணயச் சுழற்சியில் வென்ற இந்த அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ரெய்லர் 25 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர், இரண்டாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த மட்சிகென்யேரி (73), இப்ராகிம் (65), ஜோடி அபாரமாக ஆடி அணிக்கு வலுவான ஸ்கோரை பெற்றுத்தந்தது.

வேர்முலன் (12), சிக்கும்பரா (0), ஆகியோர் ரன் அவுட்டாயினர். ஆட்டத்தின் கடைசி நேரத்தில் விரைவாக ஓட்டங்களைக் குவித்த மசகட்சா 21, தைபு 24 ஓட்டங்களில் வெளியேறினர். இதனால் 50 ஓவர்களில் சிம்பாப்வே 238 என்ற ஸ்கோரை எட்டியது.

239 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு சோலங்கி, பெல் ஜோடி அபார தொடக்கத்தை அளித்தது. இவர்களின் விளாசல் ஆட்டத்தின்மூலம் அணியின் ஸ்கோர் மிகவிரைவாக உயர்ந்தது.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 138 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் பெல் (53) மட்சிகென்யேரி பந்தில் வெளியேறினார். தொடர்ந்து விரைவாக ஓட்டங்கள் குவித்த சோலங்கி 89 பந்துகளில், ஒருநாள் போட்டிகளில் தனது இரண்டாவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இவர் சரியாக 100 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இறுதியில் இங்கிலாந்து அணி 43.1 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 239 ஓட்டங்கள் எடுத்தது. கப்டன் மைக்கல் வோகன் 54, ஸ்ரரஸ் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதன் மூலம் 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற இங்கிலாந்து 3-0 என்ற முன்னிலையில் தொடரையும் கைப்பற்றியது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# வலி.தெற்கு பிரதேச சபைக்கு ஒன்பது லட்சம் ரூபா ஒதுக்கீடு

(தெல்லிப்பளை)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் இந்த வருடம் வலி.தெற்கு பிரதேச சபையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கென 9 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியிலிருந்து சனசமூக நிலையங்களின் கட்டட மீள் புனரமைப்புப் பணிகள், மின்னிணைப்புப் பராமரிப்பு, மலசலகூட திருத்த வேலைகள், தளபாடக் கொள்வனவு, விளையாட்டு உபகரணக் கொள்வனவு, சனசமூக நிலைய முன்பள்ளிகளுக்கான தளபாடக் கொள்வனவு, சுன்னாகம் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் நடாத்தப்படும் சிறுவர் பள்ளிக்கான தளபாட கொள்வனவு, சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் செயற்படும் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலைய அபிவிருத்தியும், வீதிப் புனரமைப்பும் போன்ற செயற்திட்டங்களை மேற்கொள்ளவிருப்பதாக வலி.தெற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தெரிவித்தார். (101)



நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டுறவாளர் வீரசிங்கம் நினைவு நிகழ்வில் சிறந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வில் - சிறந்த கூட்டுறவுச் சங்கமாகத் தெரிவான சங்கத்தின் தலைவருக்கு தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவுப் பகுதி பொறுப்பாளர் பெ.புஸ்பகுமார் பரிசில் வழங்குகிறார்.

# மணற்காட்டு பிரதேசத்தில் இலவச மருத்துவ முகாம்

(பருத்தித்துறை)

எச்.ஆர்.எஸ் நிறுவன இயக்குனர் கப்டன சாள்ஸின் உதவியுடன் குடத்தனை தென்னிந்தியத் திருச்சபை கடந்த இரண்டு மாதங்களாக இலவச மருத்துவ சேவை ஒன்றை மணற்காடு பிரதேசத்தில் நடாத்திவருகிறது.

தொடர்ந்தும் அடுத்த வருடமும் இவ்வாறான மருத்துவ சேவையை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்தப்பகுதி தென்னிந்திய திருச்சபை குரு தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் வைத்திய சாலை வசதிகள் எதுவும் இல்லை. சிறிதளவு தூரத்தில் குடத்தனை வைத்தியசாலை இருக்கின்றபொழுதும், அங்கே பெரிதும் வசதிகள் இல்லை. எனவே, தூரத்திலுள்ள மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கே செல்லவேண்டியுள்ளது.

இரண்டு மாதங்களாக நடைபெற்ற இலவச மருத்துவ சேவையால் தாம் பெரிதும் பயனடைந்துள்ளதாகச் சேவையைப்பெற்ற மக்கள் தெரிவித்தனர். (14)

# பாடசாலை மட்ட திட்டமிடல் முறை ஜனவரிமுதல் நடைமுறைக்கு!

எதிர்வரும் 2005 ஜனவரிமுதல் நாட்டிலுள்ள 9466 பாடசாலைகளிலும் பாடசாலை மட்டத் திட்டமிடல் எனும் புதிய நடைமுறை பின்பற்றப் படவுள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு பயிற்சியும் விளக்கமும் அளிக்கப் படவுள்ளது. இந்தப் புதிய நடைமுறையின்படி 2006 ஆம் ஆண்டு முதல் பாடசாலைகளுக்குத் தேவையான ளவு நிதி மற்றும் வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன.

2006 ஆம் ஆண்டுமுதல் 2010 ஆம் ஆண்டுவரை இடைக்காலக் கல்வித் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுச் செயற்படுத்தப்படவுள்ளது. (122)

## ஒளிவிழா

வடமராட்சி கிழக்கு குடத்தனை தென்னிந்திய திருச்சபை பாலர் பாடசாலையின் வருடாந்த ஒளிவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி மாலை 4 மணிக்கு பாடசாலை இயக்குனர் வண.ராஜன் றோகான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இந்தப் பாலர் பாடசாலை மாணவர்களின் நடனம், நாடகம், அபிநயப் பாடல்கள் போன்ற நிகழ்வுகள் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் நடைபெறவுள்ளன. மாணவர்களுக்குப் பரிசில் வழங்கும் வைபவமும் நடைபெறவுள்ளது. (14)

# குப்பை சேகரிக்கும் இடத்துக்கு சுற்றுமதில் கட்டும்பணி ஆரம்பம்

மாநகரசபை குப்பை கொட்டுவதற்கு காக்கைதீவில் 50 ஏக்கர் காணி தெரிவுசெய்யப்பட்டு அதற்குச் சுற்றுவேலி அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

குறிப்பிட்ட காணிக்குச் செல்வதற்கு மதகு ஒன்று போடப்பட்டுவருவதாகவும், அந்த இடத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த ஒருவரைக் காவலாளியாக நியமிப்பதாகவும், ஜனவரி முதல் குப்பைகொட்டும் செயற்பாடு இடப்பிரச்சினைகள் இன்றி நடக்குமென மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (வ)



அண்மையில் நடைபெற்ற சைவபரிபாலன சபை முன்பள்ளி விளையாட்டுப் போட்டி நிகழ்வில் மாணவர் ஒருவருக்கு பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்குவதைப் படத்தில் காணலாம். (111)

# சின்னஞ்சிறு செய்திகள்

## பஸ் நிலையத்தைப் புனரமைக்க நடவடிக்கை

வல்வெட்டித்துறை நகர்ப் பகுதியில் அமைந்துள்ள பஸ் நிலையத்தையும், சனசமூக நிலையத்தையும் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

வல்வெட்டித்துறை மக்களின் கல்விக்குப் பெரும் சேவையாற்றி வந்த வல்வை சனசமூக சேவா நிலையத்தைப புனரமைப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். பஸ் நிலையக் கட்டடம் மிகவும் பழமையடைந்த கட்டடமாகக் காணப்படுகின்றமையால் இந்தக் கட்டடத்தையும் புனரமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (14)

## மாதாந்த பொதுசன உதவிப்பண கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

டிசெமபர் மாதத்துக்கான மாதாந்த பொதுசன உதவி புற்றுநோய், காசநோய் கொடுப்பனவுகளை இந்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் தபாலககங்களில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாண பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

## மானிய விலையில் தென்னம் நாற்றுகள்

நெடுந்தீவு பிரதேச மக்களுக்கு உதவி அரசாங்க அதிபரின் ஏற்பாட்டின்கீழ் சுமார் 1500 தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டுள்ளன.

கமநல சேவைகள் திணைக்கத்தால் வழங்கப்பட்ட இந்தத் தென்னங்கன்றுகள், நெடுந்தீவுக்கு எடுத்துவரப்பட்டு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சுமார் 250 தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்பட்டு பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டன. (113)

## வெள்ள நிவாரணம் வழங்க நடவடிக்கை

காக்கைதீவு மற்றும் கல்லுண்டாய் திருவாவடுதுறை ஆதீன வீட்டுத்திட்ட மக்களுக்கு வெள்ள நிவாரண உதவிகளை வழங்குவதற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சுப்பிரமணிய சர்மா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதனிடையே இவர்களுக்கு கூரை விரிப்புகள் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (91)

## உடுவில் கோட்ட ஆசிரியர்களுக்கு

தற்போது நடைபெற்றுமுடிந்த தரம் 9 இற்கான மாகாண பொதுப் பரீட்சை, க.பொ.த.(சா/த) முன்னோடிப் பரீட்சை என்பவற்றின் புள்ளி விபரப் படிவங்களை இன்றும், நாளையும் ஆசிரியர்கள் உடுவில் கோட்ட அலுவலகத்திற்கு வருகைதந்து புள்ளிப் பதிவுகளைப் பெற்றுப் பூர்த்தி செய்துதருமாறு கோட்டப் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் கேட்டுள்ளார். (101)

## சிங்கப்பூர், மலேசியா ஓய்வூதியம் பெறுவோருக்கு

மலேசியா, சிங்கப்பூர், ஓய்வூதியம் பெறுபவர்களது நவம்பர் மாதக் கொடுப்பனவுப் பட்டியல்கள் அந்தந்த வங்கிகளுக்கு - யாழ்.செயலக ஓய்வூதியப் பிரிவினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஓய்வூதியம் பெறுபவர்கள் அந்தந்த வங்கிகளில் பெற்றுக்கொள்ள முடியுமென யாழ். செயலக ஓய்வூதியக் கிளை அறிவித்துள்ளது. (24)

## சுற்றுலா செல்லவிரும்பும் கலைப்பீட மாணவருக்கு

கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்கள் கல்விச் சுற்றுலா செல்வதற்குத் தீர்மானித்துள்ளனர். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் 7, 8, 9, 10 ஆகிய திகதிகளில் மாணவர் வரவை உறுதிப்படுத்துவதற்கான பதிவு மேற்கொள்ளப்படும். பதிவுகள் மாணவர் பொது அறையில் செய்துகொள்ளமுடியும் என்று கலைப்பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## கலைப்பீட மாணவர்களுக்கு பரீட்சை

பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதிமுதல் ஆரம்பமாகவுள்ளது. இவர்களுக்கான நேர அட்டவணை விளம்பரப் பலகையில் போடப்பட்டுள்ளதாக கலைப்பீடாதிபதி தெரிவித்தார். (72)

## நுளம்பு வலைகளுக்கு மருந்து தோய்த்தல்

(வடமராட்சி)

நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்தி, டெங்கு நோயைத் தடை செய்யும் முகமாக வடமராட்சி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் இன்று வதிரியிலுள்ள தாய்சேய் சிகிச்சை நிலையத்தில் வைத்து நுளம்பு வலைகளுக்கு பேமத்திரன் மருந்து தோய்க்கவுள்ளனர். இதனால் பொதுமக்கள் தம்மிடமுள்ள நுளம்பு வலைகளை நன்கு கழுவி உலரவிட்டு எடுத்து வரும்படி நெல்லியடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இளங்கோ தெரிவித்தார். (12)

# தொடருள் கல்விச் செயலமர்வுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்விவலய ஆசிரியர்களுக்கான தொடருள் கல்விச் செயலமர்வுகள் இன்றுமுதல் நான்கு நாட்களுக்கு வரணி ஆசிரியர் வள நிலையத்தில் காலை 9 மணிமுதல் மாலைவரை நடைபெறவுள்ளது.

பாடசாலைகளில் இருந்து பொருத்தமான ஆசிரியர்களை இந்தச் செயலமர்வுக்கு அனுப்பிவைக்குமாறு அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார். (31)

# 2006 ஆம் ஆண்டு முதல் பொலித்தீன் பாவனை தடை

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் பொலித்தீன் பாவனை தடை செய்யப்படவுள்ளது. இதன்பின்னர் பொலத்தீன் பாவனையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், தண்டனையும் வழங்கப்படவுள்ளது என மத்திய சுற்றாடல் சபை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் சம்பந்தமாக மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி சபை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. சுற்றாடல் இயற்கை வனவள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசியின் பணிப்புரையின் பேரில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை இந்தச் செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளது.

# கச்சாய் கடற்தொழிலாளரின் பாஸ் கடற்படையினரால் பறிப்பு

(தென்மராட்சி)

கச்சாய் கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு படையினரால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் நான்கு மீனவர்களிடம் இருந்து கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

கச்சாய் பிரதேசத்திலுள்ள இராணுவ முகாம்களுக்கு இராணுவத்தினரின் கட்டளைக்கு அமைய இலவசமாக மீன் வழங்கி வந்ததாகவும், தற்பொழுது மீனவர்கள் இலவசமாக மீன் வழங்குவதை நிறுத்தியதாலே இவர்களது கடற்தொழில் அனுமதிப் பத்திரங்களைப் படையினர் பறிமுதல் செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக கச்சாய் கடற்தொழிலாளர் சமாசம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளது.




# நள்ளிரவுத் தேடுதல்

## சிறுகதை

நைஜீரியாவின் பத்தொன்பது மாநிலங்களில் ஒன்றான சொகாட்டா புதர்கள் நிறைந்த அரைக் காடு. அங்கே நான், கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களாக ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கடமையாற்றினேன். ரம்ழான் மாதத்தில் ஒரு மாலைப்பொழுதில், நோன்பு விரதம் முடிந்தபின், ஓய்வாக வீட்டு வாசலில் அமர்ந்து, அன்றைய செய்தித்தாள்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவ்வேளை யாரோ தெருக் கதவைத் தட்டும் சத்தம் எழுந்தது. பயிற்சிக் கல்லூரியில் என்னுடன் தொழிற்புரியும் விவசாய விஞ்ஞான விரிவுரையாளர் அவர். நான், அவரை வாருங்கள் என்று சொல்வதற்குமுன்பே, அவர் தன் கவலையை என்முன் சொரிந்தார். தன் மனைவி சில உணவுப் பொருட்கள் விற்பதற்காகத் தன் ஒரே குழந்தையுடன் சென்றாள். திரும்பிவரவில்லை என்றார்.

சிறு புதர்கள் அடர்ந்த அந்த நாட்டில் ஆசிரியர்களின் மனைவியர் தங்கள் குழந்தைகளை முதுகில் கட்டித் தொங்கவிட்டபடி, தாங்கள் கணவனின் வருவாய்க்குத் துணைநிறைவாக, பயனாளிகளுக்குச் சில பொருட்களை விற்பதற்காக அருகிலுள்ள சந்தைக்குப் போய்வருவது வழமையானது.

அந்த நேரம்வரை திரும்பிவராத தன் மனைவியைத் தேடுவதற்கு அந்தக் கிராமத்துக்குத் தன்னைக் கூட்டிப்போகும்படி தயவாய் வேண்டினார்.

அப்போது நேரம் இரவு 7.30. ஆபிரிக்க நாடுகள் தன்னின உயிருண்ணும் வழக்கத்துக்குப் பெயர்பெற்றவை. நான் ஒரு நீக்ரோவுடன் காரில் செல்வதை விரும்பவில்லை. அவன் வேறொரு நாட்டின் கிறிஸ்தவன். எனினும் ஒரு கணவன் தன்னுடைய மனைவிமேல் கொண்டிருக்கும் உணர்வார்வத்தை மனதிற்கொண்டு, வேறு வழியின்றி, என்னுள் எழுந்த கடும் வெறுப்புணர்வையும் விஞ்சி, அவன் வேண்டுகோளுக்கு இணங்க வேண்டியதாயிற்று. எடு அல்லது விடு என்ற நிலையை எதிர்கொண்டு நான் கார் என்ஜினை இயக்கினேன். கராஜிலிருந்து காரை வெளியில் எடுத்தேன். எனக்குக் கடும் சோதனை காத்திருப்பதை சிறிதும் உணராதவனாக.

❖ ❖ ❖

நீக்ரோ ஆசிரியருடன் நான் வீட்டிலிருந்து வெளியேறினேன். மனைவியையும், அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த எட்டு வயதான மகளையும், நான்கு வயதான மகனையும் விட்டு ஊடுருவமுடியாத இருளில், ஒடுங்கிய கரடுமுரடான தெரு வில் நான் காரைச் செலுத்தினேன். அந்த நேரத்தில், அந்தப் பகுதியில் மின்பிறப்பாக்கியால் வழங்கப்பட்ட மின் வெளிச்சம் நிறுத்தப்பட்டிருந்ததால், என்னுடைய நீல வண்ண வோக்ஸ்வகன் பல கிலோமீற்றர் இருளை விழுங்கிக்கொண்டு, பத்துக் கிலோ மீற்றர் சென்றும்கூட என் சகபணியாளர் நாடிவந்த கிராமத்தைக் கண்டு பிடிக்கவில்லை. அந்தத் தெரு மேலும் மேலும் ஒடுங்கி வாகனத்தைச் செலுத்த வசதியற்றதாயிற்று. ஒரு கிலோ மீற்றர் என்று சொன்னீர்கள். இப்போ என்னை எங்கே கூட்டிக்கொண்டு போகிறீர்கள்? என்று உள் உறுத்தலுடன் அவரிடம் கேட்டேன். காரைப் பின்னால் எடுங்கள் என்றார் அவர். அந்தக் கும்மிருட்டில் பின்னால் ஓட்டும் ஆற்றல் வைக்கோல் குவியலில் ஒரு ஊசியைத் தேடுவது போன்ற கடினமான காரியம் என்பதால், நான் ஒரு ஒடுங்கிய பாதையில் காரைத் திருப்பினேன். அது ஒரு மோட்டார் கார். செல்லத் தகுதியற்றது. அந்த நடை பாதையின் மேடு பள்ளங்களில் குலுங்கியும் துள்ளியும் பதினைந்து நிமிடங்கள் வரை நத்தை வேகத்தில் நகர்ந்து ஒரு மொட்டைத் தெருவை அடைந்தோம். அங்கே ஒரு கூட்டம் எருமைகள் குவியலாய் நின்றன. சில இலை குழைகளைத் தின்றுகொண்டும், சில சேற்று நிலத்தில் புரண்டுகொண்டும், வேறுசில நேரே எங்களைப் பார்த்தபடி நின்றன. எளிதில் அசையாது. வாகனத்தின் ஊதொலிக்கும் முன்விளக்கின் பளிச்சொலிக்கும் கவலைப் படாமல் ஒரே நிலையில் நின்றன.

❖ ❖ ❖

காரிலிருந்து இறங்கி அந்த மிருகங்களை விரட்டித் துரத்துவதற்கு வாய்ப்பில்லை. அதற்குக் காரணங்கள் இரண்டு, அந்த அச்சமூட்டும் மிருகங்கள் அழையா விருந்தாளிகளான எங்களைத் தாக்கலாம் அல்லது அந்த இருளடர்ந்த இடங்களில் கொடிய பாம்புகள் சுற்றித்திரியலாம்; சொகாட்டா மாநிலம் பல வகை கொடிய பாம்புகள் நிறைந்தது என்பதால்.

காரைப் பின்னால் செலுத்துவதுதான் என் அடுத்த முடிவு. உண்மையில் அது ஒரு ஆபத்தான வேலை. ஒருபக்க நடைபாதையால் மெல்ல மெல்ல ஓடி, இங்குமங்குமாகத் திரும்பி, விரைவிலேயே ஒரு வலைச் சிக்கலான பக்க நடைபாதைக்குள் அகப்பட்டுக் கொண்டோம். அந்தக் கொடூரமான இருளில் எங்களுக்கு ஏற்படப்போகும் விளைவுகளை ஏற்கமுடியாதவராக இருந்தபோதிலும், நான் காரை ஓட்டினேன். அந்தப் பாதையில் ஒரு பெரியகூட்டம். ஒட்டகத்தை எதிர்கொள்ளும்வரை மீண்டும் கார் பின்னால் நகர்த்தப்பட்டு, மற்றொரு நடைபாதையில் ஓடியது. அது முதலில் போன இரண்டையும்விட நல்லது. அந்தப் பாதையில் காரை ஓட்டினேன். எதிர்பாராமல் ஒரு கரடுமுரடான வெளியை அடைந்தேன். காரைத் திடீரென நிறுத்தினேன். அதற்கப்பால் கார் செல்லமுடியாதபடி பள்ளம். ஒரு வினாடியில் நான் எச்சரிக்கை கொள்ளவில்லையென்றால், அந்தப் பள்ளம் எங்களுக்குக் கல்லறையாகியிருக்கும். நேரம் காலை இரண்டு மணியாக இருந்ததால், அந்த இடம்முழுவதும் வெறுமை. அமைதி ஆட்சி செலுத்தியது. ஆனால், இடையிடையே இரவில் நடமாடும் விலங்குகள் எழுப்பும் அருவருப்பான ஒலிகள் அந்த அமைதியைக் குலைத்தன. அருகில் ஆந்தைகள் கூ கூ என்று அச்சமூட்டின. காட்டு நாய்கள் சீற்றத்துடன் குரைக்கும் சத்தம் எங்கள் காதுகளைத் துளைத்தன. கழுதைப் புலிகள் கூச்சலுடன் ஊழையிட்டன. இரவில் நடமாடும் வேட்டை விலங்குகள், இடைவெளிவிட்டு கதறும் வெள்ளாடுகள், உறுமும் எருதுகள்... இறுதியாக அத்தகைய கடினமான நிலமைகளால், நடைபாதையை ஒரு மின்விளக்கின் உதவியுடன் பார்வையிடுவதற்கோ அல்லது ஒரு ரயர் ஓட்டையைச் செப்பனிடவோ வாய்ப்பிருக்கவில்லை. என்னுடைய வாகனம் ஒரு ரயர் ஓட்டைக்கு உட்படாததற்காக எங்கள் கிரகங்களுக்கு நன்றி. ஆனால் எரிபொருள் கலனில் மீற்றர் கருவி தீக்குறி காட்டியது. பாதிக்கும் குறைவாகவே பதிவு காட்டியது. முதல்நாள் இரவு நான் புறப்பட்டபோது கொள்கலன் நிறைந்திருந்தது.

❖ ❖ ❖

நாங்கள் காரை நிறுத்தினோம். ஒருவரையொருவர் ஏமாற்றத்துடன் பார்த்தோம். இனமறியாத உணர்வு எங்களை ஆட்கொண்டது. நாங்கள் நாற்புறமும் உற்றுப் பார்த்தோம். எதுவும் தென்படவில்லை. எங்களைச் சுற்றி ஒரே இருள்திரை. நடக்கவிருப்பதை எண்ணி நாங்கள் அஞ்சவில்லை. எனது சகாவின் வேண்டுகோளின்படி காரை மற்றொரு பாதையில் திருப்பினேன். இப்போ


ஆங்கிலத்தில் - ஏ.எம்.தாவூத், தமிழில் - எஸ்.பி.கே

ஒரு நடைபாதைக்கும், திறந்த வயலுக்குமிடையில் வேறுபாடு தெரியவில்லை. மெல்ல மெல்ல ஆடியலைந்து நெடுவெளியில் காரை ஓட்டினேன். ஒவ்வொரு விநாடியும் கார் மேலும் கீழுமாகக் குலுங்கியது. அப்படியே ஒருமணி நேரம் வரை ஓடியபின் ஒரு சிறு வெளிச்சத்தை நாங்கள் கண்டோம். அந்த இடத்தை அடைந்தபோது, ஒரு மனிதன் காட்டு விளக்குடன் ஒரு குடிசையில் இருப்பதைப் பார்த்தோம். அந்தக் குடிசையைச் சுற்றி வெள்ளாடுகளும், செம்மறியாடுகளும் கூடியிருந்தன. என் சகா காரை விட்டிறங்கிப்போய் அவனுடன் கதைத்தார். அறுவடை முடிந்த வயல் வரம்புகளின் மேலால் காரை ஓட்டி வந்திருக்கிறோம் என்று அவன் கூறியதாகத் தெரிந்தது. என் சகாவின் ஆலோசனைப்படி நான் காரைத் திருப்பி, மீண்டும் அதே வயல் வரம்புகள் மேலால் ஓட்டினேன். இப்போது என் சக விரிவுரையாளர் தன் மனைவி போயிருந்த கிராமத்தைத் தேடவில்லை. ஆனால் பயிற்சிக் கல்லூரி இருக்கும் பக்கூசா கிராமம் எங்கே உள்ளது என்று நாங்கள் சந்தித்த இரு காட்டுவாசிகளிடம் கேட்டார். அந்த மனிதர்கள் ஆபத்து அதிகம் இல்லாத அந்த இடத்தில் வாகனத்தை நிறுத்துவது தவறு என்றபோதிலும், அப்படிக் காரை ஓட்டிக்கொண்டிருக்கையில், வயலின் அருகே, யாரோ வீடு கட்டுவதற்கென்று மண் அகழ்ந்து எடுக்கப்பட்ட இரண்டு கிடங்குகளில் விழுந்தோம் என்று சொல்லலாம். அந்தக் காட்டு வெளிச்சம் காணப்பட்ட குடிசைக்கு அப்பால், ஒருமணி நேரமாகச் சுழன்று சுழன்று பயணம் செய்தபின், நாங்கள் மற்றொரு சிறு குடிசையை அடைந்தோம். அங்கே இரண்டு காட்டு மனிதர்கள் அந்த நள்ளிரவு வேளையில் அரைத் துண்டு உடுத்தியவராய்க் காட்சியளித்தனர். ஓலை வேய்ந்த கூரையில் ஒரு காட்டுவிளக்கு ஆடியது. அவர்கள் எனக்குப் புரியாத மொழியில் பாடிக்கொண்டிருந்தனர். அந்த மொழி தெரிந்த எனது சகா அவர்களிடம்போய் "பர் காடே சாபொன்காரி இனா கோ பக்கூரா" என்று கேட்டது என் காதில் விழுந்தது. பக்கூரா கிராமத்துக்கு எப்படிப் போவது என்று கேட்டதாக, பின்னர் அவர் என்னிடம் சொன்னார். நாங்கள் அங்கிருந்து ஆடி அசைந்து நடைபாதையிலும், கரடு முரடான தெருக்களிலும் காரை ஓட்டிச் சென்றோம். ஆனால் பக்கூரா கிராமத்தைச் சென்றடையும் வாய்ப்பு மிகத் தொலைவில் இருந்தது. எரிபொருள் கலனில் காற்பங்குக்கும் குறைவாக இருந்ததால்.

அதேவேளை ஒருமணி நேரத்தில் நான் திரும்பி விடுவேன் என்று எதிர்பார்த்த என் மனைவி, நள்ளிரவின் பின்பும் நான் திரும்பாததால் திகைப்படைந்தவளாய் வீட்டுக்கு வெளியேவந்து திறந்த வராந்தாவில் அமர்ந்து, எனக்கு என்ன நடந்ததோ என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அந்த நேரத்தில் வீட்டைவிட்டு வெளியே வந்திருப்பதில் உள்ள ஆபத்தை உணராமல், இரவில் நடமாடுவதில் உள்ள தீங்கையும் மறந்து, எங்கள் வீட்டையடுத்த மூன்றாவது வீட்டில் வசித்த ஒரு சிறிலங்காப் பெண்ணின் வீட்டுக்குப் போயிருந்தாள். இங்கே வீடுகள் ஒன்றிலிருந்து மற்றது மிகத் தொலைவில் இருக்கும். அந்தப் பெண்ணும் பயிற்சிக் கல்லூரியில் ஒரு விரிவுரையாளர். பின்னர் அவளும் என் மனைவியும் சேர்ந்து, என் வீட்டுக்குப் பின்னால் இருக்கும் கல்லூரி அதிபரின் வீட்டுக்குச் சென்றனர். நிலைமையை எடுத்துரைத்தனர். அவர் மிகக் கவலையுடன் விபரம் கேட்டறிந்தார். நாடு கடந்து வந்துள்ள ஒரு ஆசிரியர், மிகப் பண்பற்ற, விலங்குகள் போன்று பழக்கமுடைய, தூரம் ஒரு இடத்தில் தனியிடங்களில் வாழும் நீக்ரோக்கள் உள்ள அரை வனாந்திரக் காட்டின் உட்பகுதியில் ஏன் எட்டு மணி நேரம் தங்கவேண்டும்? என்ன காரணம்? என்று சிந்தித்தார்.

நேரம் காலை மூன்றுமணி. ஏதோ நடந்திருக்க வேண்டும் என்ற ஐயம் கொண்டவராய், விடியலின் முதல் ஒளிக்கீற்று கண்டவுடன், காவல் நிலையத்துக்குப் போக வேண்டும் என்று முடிவுசெய்தார். நான் காணாமல் போனது பற்றித் தோன்றிய அவநம்பிக்கையை என் மனைவி முன்னால் வெளிப்படுத்தாமல், அவர் என் மனைவியை அமைதிப்படுத்தி, நான் பாதுகாப்பாகத் திரும்பவேண்டும் என்று கடவுளிடம் மன்றாடும்படி அவளிடம் ஆலோசனை சொன்னார். காலை அசான் முடிந்த (தொழுகைக்கு அழைப்பு) கிட்டத்தட்ட காலை ஆறு மணிக்கு, தூசிபடிந்த, சேறு வாரி வீசப்பட்ட நீலவண்ண வொக்ஸ்வகன் பயிற்சிக் கல்லூரியை அடைந்தது.

தூக்கத்துடனும், வீங்கிய கண்களுடனும், கடும் பசிக்குள்ளாகி என் சக நீக்ரோ பணியாளர்கூட வர, நான் என் விடுதியை அடைந்தேன்.

அதுவரை என் மனைவியும் அந்த சிறிலங்காப் பெண்ணும், போரிலிருந்து திரும்பும் மாவீரனை வரவேற்கக் காத்திருப்பது போல், வீட்டுக்கு வெளியே வீற்றிருந்தனர்.

# காலத்தால் அழியாத கவிஞர் கண்ணதாசனின் சினிமாப் பாடல்கள்

*காலமாகிய சிலோன் விஜயேந்திரனால் 'கண்ணதாசனின் பாநயம்' என்ற தலைப்பில் எழுதிய நூலில் இருந்து சுவையான ஒரு பகுதியை இலக்கிய வாசகர்களுக்காகத் தருகிறோம்.*

மானுட இதயங்களின் மகோன்றை ராகம் காதல்! ஆனந்தமும் இன்பமும் தோய்ந்த விந்தை. ஏக்கங்கள் நிரம்பி வழியும் நூல் அனுபவம்! கவியரசர் காதல் அனுபவங்களைத் தம் சொந்த வாழ்விலேயே கண்டவர். அதனால் தான் அவர் திரைப்படங்களில் கதா பாத்திரங்களுக்காக எழுதிய காதல் பாடல்களிலும் கூட, ஜீவ களை பொலிகிறது.

அந்தப் பாடல்களைக் கேட்பவர்கள் தாமே காதலின் இன்ப துன்பங்களை அனுபவிக்கும் தேவ சுகத்தை அடைகிறார்கள். இதோ காதலி பாடுகிறாள்.

*உன்னைக் காணாத கண்ணும்*
*கண்ணல்ல!*
*உன்னை எண்ணாத நெஞ்சம்*
*நெஞ்சல்ல!*
*நீ சொல்லாத சொல்லும்*
*சொல்லல்ல!*
*நீ இல்லாமல் நானும் நானல்ல!*

காதல் இரண்டு இதயங்கள் ஒன்றாகி யுக யுகாந்திரத்தையும் தாண்டி, நிலைக்கவல்ல அன்பின் கூட்டுறவில் அரும்புவது! இதைத் தமது தமிழ் மூலம் அமரச்சித்திரமாய் தீட்டுகிறார் கவியரசர்.

*இங்கு நீ யொரு பாதி*
*நானொரு பாதி*
*இதில் யார் பிரிந்தாலும்*
*வேதனை பாதி*
*காலங்கள் மாறும்... காட்சிகள் மாறும்*
*காதலின் முன்னே நீயும் நானும் வேறல்ல!*

காதலின் நேர்த்தி மிகு அனுபவங்களை உயிரோட்டமான இலக்கியமாக்கும் மணித் தமிழ் மாக்கவிஞர் இன்னமும் வாழ்ந்து இப்படியான பாடல்களை இயற்றக் கூடாதா? என்ற ஏக்கமே எமக்கு உண்டாகிறது!

காதலிக்காக அவன் மலரோடு காத்திருக்கிறான் அதோ அவள்! அவன் பாடுகிறான்.

*நான் மலரோடு தனியாக*
*ஏன் இங்கு வந்தேன்*
*என் மஹாராணி உனைக் காண*
*ஓடோடி வந்தேன்.*

அவனைக் கண்டதுமே அவள் பரவசத்துடன் பாடுகிறாள்!

*நீ இல்லாமல் யாரோடு*
*உறவாட வந்தேன்*
*உன் இளமைக்குத் துணையாகத்*
*தனியாக வந்தேன்.*

இங்கே பாருங்கள்! அவன் அவளிடம் என்ன கேட்கிறான் என்று

*நீ வருகின்ற வழி மீது யார்*
*உன்னைக் கண்டால்*
*உன் வளை கொஞ்சும்*
*கை மீது பரிசென்ன தந்தார்*
*உன் மலர்க் கூந்தல்*
*அலை பாய அவர் என்ன சொன்னார்?*
*உன் வடிவான இதழ் மீது*
*சுவையென்ன தந்தார்!*

அவன் தன்னிடம் விசமம் செய்கிறான் என்பது அவளுக்குப் புரிந்துவிட்டது!

*அவள்,*
*பொன் வண்டொன்று மலரொன்று*
*முகத்தோடு மோத*
*நான் வளை கொண்ட*
*கையாலே மெதுவாக மூட*
*என் கருங்கூந்தல்*
*கலைந்தோடி மேகங்களாக*



*நான் பயந்தோடி வந்தேன்*
*உன்னிடம் உண்மை கூற*

*நீ இல்லாமல் யாரோடு*
*உறவாட வந்தேன்*
*உன் இளமைக்குத் துணையாகத்*
*தனியாக வந்தேன்!*

மேற்காணும் பாடலைக் காதல் ரசம் கொட்ட உவகை நயம் சொட்ட, உவகை நயம் மின்னிட, உயிர் தமிழ் மலராய் பிரசவித்துள்ளார்.

அழகும் அன்பும் ஒழுக்கமும் நிறைந்த பெண் ஒரு ஆணுக்கு வாய்த்து விட்டால், அதைவிட பேரானந்தம் எதுவும் இருக்க முடியாது!

அத்தகைய பேரழகுப் பெண்ணை அவன் காண்கிறான். மனதில் ஆசைப் பறவைகள் ஆயிரம் பறக்கின்றன! பாடுகின்றான்.

*அதிசய ராகம் ஆனந்த ராகம்*
*அழகிய ராகம் அபூர்வ ராகம்*
*வசந்த காலத்தில்*
*மழை தரும் மேகம் அந்த*
*மழை நீர் அருந்த மனதினில் மோகம்*
*இசையெனும் அமுதினில்*
*அவளொரு பாகம் – அந்த*
*இந்திரலோகத்துச் சக்கர வாசம்!*

கவியரசரின் கற்பனை விண்ணைத் தொடும் வண்ணம் விரிகிறது!

*பின்னிய கூந்தல்*
*கருநிற நாகம்*
*பெண்மையின் இலக்கணம்*
*அவளது தேகம்*
*தேவர்கள் வளர்த்திடும்*
*காவிய யாகம் – அந்த*
*தேவதை கிடைத்தால்*
*அது என் யோகம்!*

காதலிலே ஈடுபட்டு பேரழகுப் பெண்ணொருத்திக்காகத் தவமியற்றிக் காத்திருக்கும் ஒரு மனிதனின் மன நிலையை, ஒரு மகா கவிஞனுக்குரிய மிடுக்கோடு, கற்பனை சிந்தியும், மதுரச் சொற்களைக் கோர்த்தும் மேற்காணும் பாடலை இயற்றியுள்ளார் கண்ணதாசன்.

அண்ணன் தங்கை பாசத்தை கவியரசர் போல வேறு யாரால் சொல்ல முடியும்! தன் தங்கையை மகாராணிபோல் வைக்க வேண்டுமென அண்ணன் ஆயிரமாயிரம் கனாக்கள் கண்டான். விதியின் கோர விளையாடலை யாரால் தடுக்க முடியும். தங்கை ஒருவனைக் காதலித்தாள். அவனைத் தனக்குப் பிடிக்காத போதும் தங்கை விரும்பிவிட்டாளே என்று அவனையே அவளுக்கு மணம் முடித்து வைத்தான் அண்ணன்! விளைவு? தீய சக்திகளால் தங்கை வாழ்வு சீரழிந்து போனது!

தங்கையின் குடும்ப வாழ்வின் சின்னமாய் கிடைத்த குழந்தையை தம்மோடு வைத்தபடி நிலை குலைந்த நிலையில் இருக்கிறார்கள்! குழந்தைக்குத் தாலாட்டு அவள் பாடுகிறாள்.

*மலர்ந்தும் மலராத*
*பாதி மலர் போல*
*வளரும் விழி வண்ணமே*
*வந்து விடிந்தும் விடியாத*
*காலைப் பொழுதாக*
*விளைந்த கலை அன்னமே,*
*நதியில் விளையாடிக்*
*கொடியில் தலை சீவி*
*நடந்த இளந்தென்றலே – வளர்*
*பொதிகை மலை தோன்றி*
*மதுரை நகர் கண்டு*
*பொலிந்த தமிழ் மன்றமே!*

தங்கையைத் தொடர்ந்து அண்ணன் பாடுகிறான் –

*யானை படை கொண்டு*
*சேனை படை வென்று*
*ஆளப் பிறந்தாயடா – புவி*
*ஆளப் பிறந்தாயடா*
*அத்தை மகனை மணம் கொண்டு*
*இளமை வழி கண்டு*
*வாழப்பிறந்தாயடா!*

மேற்காணும் பாடலை உயிர் உருகி உன்னத இலக்கிய நயம் ஓங்க கவியரசர் ஆக்கியுள்ளார். தங்கை தொடர்கிறாள்.

*தங்கக் கடிகாரம் வைர மணியாரம்*
*தந்து மணம் பேசுவார் – பொருள்*
*தந்து மணம் பேசுவார் – மாமன் தங்கை*
*மகளான மங்கை உனக்காக உலகை*
*– விலை பேசுவார்!*

தங்கையின் ஆசைக் கனாக்களைத் தொடர்ந்து அண்ணன் தங்களது சகோதரப் பாசப் பிணைப்பை விபரிக்கிறான்.

*கண்ணின் மணிபோல*
*மணியின் நிழல் போல*
*கலந்து பிறந்தோமடா – இந்த*
*மண்ணும் கடல் வானம்*
*மறைந்து முடிந்தாலும் மறக்க முடியாதடா*
*– உறவைப் பிரிக்க முடியாதடா?*

நாற்பது ஆண்டுகளுக்கு முன் கவியரசர் வடித்த மேற்காணும் பாடலைக் கேட்கும் போதெல்லாம் நெஞ்சுருகிப் போகிறேன்.

## மாறியும் மாறிலியும்



பாடம் நடக்கிறது!
படிப்பதற்கு அங்குள்ள
கூடம் நிறையக் குமர்ப் பெடியள்!
தோடம் பழ நிறந்துச் சட்டம்பி தன் பாட்டில்
சேட்டம் இழுக்கும் சிணுங்கும்
சிறு குரலில் –
பாடம் நடத்துகிறார்!

'எப்போதும் மாறாதிருக்கும்
ஒரு கணியம் மாறிலியாம்'
– என்றுரைத்து
'இப்போது சொல் தம்பி!
இதற் கோர் உதாரணத்தை'
சுதி சிறிதும்
தப்பாது கேட்டார்!
வேறு நினைவில் விளைந்திருந்த மாணவனோ,
'முப்போதும் எந்தன் காதலியின்
எண்ணத்தில் மூழ்கும் என்
மனம்!' என்று சொன்னான்
மகிழ்ந்து!

'எப்போதும் நிலையின்றி ஆகும்
கணியமதைக்
கூறில் அவை மாறிகளாம்'
ஆறிப் பின் கேட்டார்!
'கூறும் உதாரணத்தை'

எனை மறந்து
வேறொருவன் தன்னை
விழையும் என் காதலியின்
நெஞ் சென்று சொன்னான்
நெகிழ்ந்து!

ஜெ.பிரேம்குமார்.

## மாலைக் கருக்கல்



மண்ணுலகை திவதஞ்செய்துவிட்ட களிப்பில்
நெருப்புப் பழமாய் வதனம் தகதகிக்க
மேல் திசையில் களைப்பாறி
காணாமல்ப்போகத் தயாராகும் கதிரவன்.

இன்றைய திவதஞ்செய்தலின் செய்திகள் திரட்டவும்
நாளைய தாக்குதலுக்கு உளவு பார்க்கவுமாக
எதிர் வீட்டுக் கதலியைப்போல்
இரகசியமாய்த் தலைநீட்டி
வெண்ணொளி பொழியத் தொடங்கும்
மழலை நிலா.

பாதைகள் எங்கணும்
மஞ்சள்நீர் தெளித்துவைத்து
கங்குலின் வரவுக்காகக்
காத்துக் கிடக்கும் தொடுவானம்.

புது மனைவியின் தொடுதல்கள்போல்
காதுமடல்களையும் உச்சியையும்
தடவிச் சென்று மயக்கம் தரும்
இளமாலைத் தென்றல்.

வெயிலைப் பருகிய போதையில்
கடந்து செல்லும் காற்றோடு
மல்லுக்கட்டித் தள்ளாடும்
மரங்களின் கூட்டம்.

குடிக்கொள்ளுதற்கு யாருமின்றி
விண்வெளித் தோட்டத்தில்
அங்கொன்றும் இங்கொன்றுமாய்
மலரத் தொடங்கும்
நட்சத்திரப் பூக்கள்.

நான் எறிந்த மௌனத்துகள்களை
முகத்தில் வாங்கி
கவிதையாகத் திருப்பித் தந்து
அண்டவெளியெங்கும் கவியத் தொடங்கும்
இரவு.

இவைகள் எதிலும் மனம் லயிக்காது
காசு வேட்டையில்
காலம் கழித்திருக்கும்
மனிதர்கள்.

இரவும் பகலும் தழுவிக்கொள்ளும்
எழில்நிறை மாலைக் கருக்கல்கள்
வாசிக்கப்படாத கவிதைகளைப் போல்
வந்துவந்து போகின்றன
தினந்தோறும்.

வேல். லவன்.

# கருத்து பிளவுபடாமல் மொழிபெயர்ப்பு

ஒரு கதையை மொழிபெயர்க்கிறவன். மூல மொழியின் சொல்வளத்தை மனதில் சொற் கருத்து ரீதியாக உணர்கிறதோடு தான், உணர்ந்ததை தன் மொழியில் மூலத்தின் அர்த்த வலுவுடன் மூலத்தின் வேகமும் தனியாமல், அதே சமயத்தில் சுயமொழியின் இயல்பையும், அழகையும் கெடுக்காத ஒரு சரளமான நடையில் தருகிறபோது, அவன் வேலை பூர்த்தியாகிறது. மூலத்தைப் படிக்கிற போது, மொழி பெயர்ப்பாளன் வாசகனாக நிற்கையில் அவனுக்கு மூலத்தை ஏற்கிற, அதன் நிஜ வலுவை ஆழமாக வாங்கிக் கொள்கிற சுரணை ஏற்கெனவே இருந்தாக வேண்டும். அப்போது தான் மொழிபெயர்ப்பு நேர்மையானதாக இருக்கும். இந்தப் பொது விதிகளோடு சொல்லுக்குச் சொல் மொழி பெயர்ப்பு, கருத்து நடை மொழி பெயர்ப்பு என்ற இரண்டு ரகங்களையும் தனித் தனியாக ஏற்று, ஒரு வேலை ஆரம்பிக்கையில் எழுதுகிறவன். இந்த இரண்டு ரகங்களுள் ஒரு ரகத்தையே முழுக்க முழுக்க கையாள விரும்புவான். அவன் துணிச்சலானவனாக இருந்தால் சொல்லுக்குச் சொல் மொழி பெயர்ப்பே அவனைக் கவரும். பொதுவாக எல்லோரும் கருத்து நடைமொழி பெயர்ப்புத்தான் செய்வார்கள். அது சறுக்கிவிடாது.

மூல ஆசிரியன் என்ற வசனங்களில் தன் கற்பனை திமிறிவர எழுதுகிறானோ, அதே வசனங்களைச் சப்பையாக்கிவிட்டு மொழி பெயர்ப்பாளன் தன் கற்பனைக்கும், சொல் வளத்துக்கும் சுயேட்சை கொடுத்து மூல ஆசிரியன் உத்தேசிக்காத இடங்களில் கற்பனை வெடிப்பைக் கொண்டு வரக் கூடாது. இது கருத்து நடை மொழி பெயர்ப்பால் ஏற்படக் கூடிய ஒரு சறுக்கல்.

வசனங்களை ஜாக்கிரதையாக பெயர்க்க முடிந்தால், ஒருத்தன் மூல ஆசிரியனை எமக்கு ஏமாற்றாமல், சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பின் மூலம் தரமுடியும். மூல ஆசிரியனின் நடையிலுள்ள தனித்துவத்தை, கருத்துநடை மொழி பெயர்ப்பால் தர முடியாது. அது சொல்லுக்குச் சொல் பெயர்ப்பாலேயே முடியும்.

அடுத்ததாக, மொழி பெயர்ப்பால் மொழிக்கு சொல் வளம் ஏற்படுவது மட்டுமல்ல, சிக்கலான விடயங்களையும், முனு முனுப்புகளையும் சொல்லிப் பழகின. ஒரு மொழியிலிருந்து நேரடியாக மொழி பெயர்க்கையில்தான், சுய மொழியின் வலு எந்த அளவு என்று அறியலாம். மொழி பெயர்க்கிறவன். இந்த ரீதியில் சொற்களின் அமைப்புகளைப் புது மாதிரி. மூல மொழியின் கருத்தாழமும், தாக்குவலுவும், தளராத நடையில் தர முயற்சிக்கையில் சுயமொழி வசனமும் செழுமை பெறுகிறது. இன்று தமிழ் உரை நடை ஒரு புறத்தில் சிக்கலான விடயங்கள் இந்த ஜாதிகளைக் கையாண்டு பழகின மொழிகளோடு தொடர்பு கொண்டு, தன் இயல்புகளுக்கு மெருகும், புதுமையும் கொடுத்துக் கொண்டுவர வேண்டும். அப்போதுதான் அது ஒரு இன்றைக்கான மொழியாகும்.

## பல அசௌகரியங்களுடன் இயங்கும் இயக்கச்சிப் பிரதேச பொதுஸ்தாபனங்கள்

இயக்கச்சிப் பிரதேசத்திலுள்ள பொதுஸ்தாபனங்கள் பல அசௌகரியங்களுடன் இயங்கி வருவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இயக்கச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை தற்காலிக கொட்டகைகளிலேயே இயங்கி வருகின்றது. தற்போது பெய்துவரும் மழை காரணமாக இந்தக் கொட்டகைகளினுள் மழை நீர் உட்புகுவதால் கற்றல் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடசாலையில் தளபாடப்பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரியவருகிறது.

இயக்கச்சி உபதபாலகம் தனியார் வீடு ஒன்றிலேயே இயங்கி வருகிறது. போரால் பாதிக்கப்பட்ட உபதபாலக நிரந்தரக் கட்டடம் இன்னும் திருத்தப்படாத நிலையிலேயே காணப்படுகிறது.

இதேபோன்று இயக்கச்சி பொதுச் சந்தையும், பல்வேறு சிரமங்களின் மத்தியிலேயே இயங்கி வருகிறது. இந்த பொதுஸ்தாபனங்கள் சகல வசதிகளுடனும் இயங்குவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியேறியுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (122)







ஓயாத அலைகள் - 03 படை நடவடிக்கையின் போது, வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவாக கிளிநொச்சி காக்கா கடைச்சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியைப் படத்தில் காணலாம்.

# முல்லைத்தீவில் 3,733 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் 3 ஆயிரத்து 733 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் இன்றி மிக நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றன.

மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட வன்னிவிளான்குளம், அம்பாள்புரம், கொல்லவிளான்குளம், ஒட்டறுத்தகுளம், சிவபுரம், பாலிநகர், கரும்புள்ளியான், பூவரசன்குளம், பாண்டியன்குளம். செல்வபுரம், மூன்றுமுறிப்பு, நட்டாங்கண்டல், விநாயகபுரம், பொன்நகர், சிறாட்டிக்குளம் ஆகிய 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும், 3 ஆயிரத்து 733 குடும்பங்களைக் கொண்ட 16 ஆயிரத்து 431 குடும்ப அங்கத்தவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த பிரதேசங்களில் கடந்த காலங்களில் இராணுவத்தினர் மேற்கொண்ட ரணகோஷ மற்றும் ஜெயசிக்குறு படை நடவடிக்கை மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளாக இருந்து பின்னர் விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்ட பிரதேசங்களாகும். இந்தப் பிரதேசங்களுக்கான போக்குவரத்து, சுகாதார வசதி, கல்வி வசதி, பாடசாலைகளில் ஆசிரியர்கள் இன்மை போன்ற சிரம்மங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்திலுள்ள பிரதான வீதி முதல் சிறுவீதிகள் வரை இதுவரையில் புனரமைக்கப்படாமல் உள்ளன. இதனால் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

## வவுனியா – செட்டிக்குளம் பகுதிக்கு இதுவரை மின் விநியோகம் இல்லை

(வவுனியா)

வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் பெரும்பாலான கிராமங்களில் இதுவரையில் மின் விநியோகம் வழங்கப்படவில்லை.

செட்டிக்குளம், முகத்தான்குளம் முதலாம் பண்ணை, இரண்டாம் பண்ணை, கிறிஸ்தவ குளம் ஆகிய கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், இந்தப் பகுதிகளுக்கான மின் விநியோகம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு மக்கள் பலமுறை கோரிக்கை விடுத்தும், இதுவரையில் இதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

## கரும்புள்ளியான் பிரதேசத்தில் கழிப்பறைகள் அமைக்கப்படவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கரும்புள்ளியான் பிரதேசத்தில் கழிப்பறைகள் இதுவரையில் அமைக்கப்படவில்லை.

கெயர் நிறுவன நிதியுதவியுடன் பாண்டியன்குளம் - துணுக்காய் அபிவிருத்தி கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கழிப்பறைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் கரும்புள்ளியான் பிரதேசத்தில் 25 கழிப்பறைகள், 22 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்ற போதும், மேலும் இவை உரிய காலத்தில் அமைத்து மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படாததுடன், தரமற்ற முறையில் அமைக்கப்பட்டு வருவதாகவும், இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## மல்லாவி பிரதேசத்தில் திருட்டுக்கள் அதிகரிப்பு!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - மல்லாவி பிரதேசத்தில் அண்மை நாட்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் வர்த்தக நிலையங்கள் சில உடைக்கப்பட்டு, அதற்குள் இருந்த பொருட்கள் களவாடப்பட்டன. இந்த நகரை அண்டிய பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதேபோன்று பாண்டியன்குளம், பாலைப்பாணி ஆகிய பகுதிகளில் கால்நடைகள் களவாடப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொண்டு இவ்வாறான திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்த வேண்டும் எனவும், இந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

## முல்லைத்தீவில் கால்நடைகளை விற்பதற்கான தடை நீக்கம்!

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளை இறைச்சிக்காக விற்பதற்கும், வேறு இடங்களுக்கு கொண்ட செல்வதற்கும் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் கால்நடைகளுக்கு ஏற்பட்டிருந்த கால்வாய் நோய் காரணமாக, கால்நடைகளை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கும், இறைச்சிக்காக விற்பனை செய்தற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

தற்போது கால்வாய் நோய் முற்றாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் கால்நடை உரிமையாளர்கள் தமது கால்நடைகளை விற்பனை செய்யவும், வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லவும், மேய்ச்சலுக்காக கொண்டு செல்லவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கால்நடைகள் இறைசசிக்காக கொள்வனவு செய்யப்படுவதற்கு, விலை உயர்வும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இந்தப் பிரதேசத்தில் இறைச்சியின் விலை அதிகரித்துள்ளது.

## வவுனியா – கல்மடு கிராமம் அடிப்படை வசதியற்ற நிலையில்

வவுனியா - கல்மடு கிராமம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இருப்பதாக, கிராம மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தக் கிராமத்தில் மக்கள் மீளக்குடியேறி வருகின்றனர். தற்போது 118 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ள நிலையில், விவசாயம், கல்வி, சுகாதாரம் உட்பட பல்வேறு நிலைகளிலும் இந்தக் கிராமத்தில் அபிவிருத்தி முன்னெடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கிராமத்தில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றால் சில திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும், இந்தக் கிராம மக்களின் வாழ்வியல் அபிவிருத்தி திருப்திகரமானதாக இல்லை.

வவுனியா நகரிலிருந்து 15 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள இந்தக் கிராமத்தின் அபிவிருத்திக்குச் சம்பந்தப்பட்டவர்கள் ஆர்வம் காட்டவேண்டும் என, கிராம மக்கள் தெரிவித்தனர்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### நூல் வெளியீட்டு விழா

கிளிநொச்சியில் 'அறிவுக்கதிர்' நூல் வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு விழா நாளை மாலை 3 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

### 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் நிதி நிறுவனம் ஒன்றால் வீதிப் புனரமைப்புக்கென 2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் சிராட்டிக்குளம், பாண்டியன்குளம் பாலிநகர் வீதிகளை புனரமைப்புக்கு தலா ஒவ்வொரு மில்லியன் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் தெரிவித்தார்.

### ஊழியர் பற்றாக்குறை

மருதங்கேணி பொது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மட்டுமே தற்பொழுது இயங்கி வருகிறது.

இந்த வைத்தியசாலை பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு, அண்மையில் திறந்து வைக்கப்பட்ட போதிலும், ஊழியர் பற்றாக்குறை காரணமாக வெளிநோயாளர் பிரிவு மட்டுமே இயங்கி வருகிறது.

இதனால் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கே சென்று சிகிச்சை பெறவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

### நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - யூனியன்குளம் பாடசாலையில் நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணி இடம்பெற்று வருகிறது.

இந்தப் பாடசாலை கட்டடம் யுனிசெப் நிறுவன நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் 250 வரையான மாணவர்கள் இடநெருக்கடியால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### முன்பள்ளி சிறார்கள் கௌரவிப்பு

(மன்னார்)

மன்னார் இலுப்பைக்கடவை முன்பள்ளிச் சிறார்கள் கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளியன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வு வடக்கு - கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

### விவசாயிகளுக்கு கடனுதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கோணாவில் காந்தி கிராமம் மற்றும் யூனியன்குளம் விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கப்பட்டது.

கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தால் 40 விவசாயிகளுக்கு இந்தக் கடன் வழங்கப்பட்டது.

விவசாய முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன், இந்தக் கடனுதவி வழங்கப்பட்டதாக கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தப் பகுதியில் 168 பேருக்கு வீடு வேய்வதற்கான கிடுகுகளும் வழங்கப்பட்டன.

### கிடுகுகள் வழங்கப்பட்டன

(விசுவமடு)

மாவீரர் தினத்தை முன்னிட்டு செடோ நிறுவனத்தின் அயராத உழைப்பால் உடையார்கட்டு, விசுவமடு பிரதேசத்தில் வசிக்கும், மிகவும் பின்தங்கிய 165 குடும்பங்களுக்கு வீடு வேய்வதற்கான கிடுகுகள் வழங்கப்பட்டன.

### பொதுமண்டபங்கள் திறக்கப்படவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாப் 1 திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மண்டபங்கள் இதுவரை திறக்கப்படவில்லை.

பாலைப்பாணி, மூன்றுமுறிப்பு ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்ட பொதுமண்டபங்கள் இதுவரை திறந்து வைக்கப்படவிலலை. இதற்கு கிராம அலுவலர்களின் அசமந்த போக்கே காரணம் என, மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி-வன்னேரிக்குளம் ஐயனார்புரம் பாடசாலையில் விசேட பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்து நிலவி வருகிறது.

இந்தப் பாடசாலையில் கணிதம், விஞ்ஞானம், அழகியல் பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்து நிலவி வருவதால், மாணவர்கள் இந்தப் பாடங்களை கற்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த விடயம் சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து தமது கற்றல் செயற்பாட்டுக்கு ஆவன செய்யுமாறு, பாடசாலை மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்*
*பொன்றாது நிற்பதுஒன்று இல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஜே.வி.பியினரின் கடிதம் காரணமாக சங்கடத்துள் சிக்கியுள்ள ஜனாதிபதி

சிறிலங்காவின் பாரம்பரிய அடையாளங்களைக் கொண்டதும், ஜே.வி.பியினரால் ஆரம்பகாலம் முதலே அவலங்களையும், நெருக்கடிகளையும் கட்சிரீதியில் மட்டுமல்லாது – தேசிய ரீதியிலும் எதிர்கொண்ட கசப்பான அனுபவங்களைக் கொண்டதுமான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி என்ற ரீதியில், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பட்டறிவு ஞானத்தை மறந்து, தொலைநோக்குச் சிந்தனையற்று தற்காலிகமானதும், தேசிய நலனுக்கு ஆபத்தானதுமான அரசியல் சுயநலன்களை இலக்காக வைத்து – ஜே.வி.பி.யினருடன் கூட்டணியமைத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்கி ஆட்சியைக் கைப்பற்றியதன் பாதகமான விளைவுகளை மிக மோசமாகவே அனுபவிக்கத் தொடங்கிவிட்டார் என்பதை அண்மைக் காலச் சம்பவங்கள் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்களின் விருப்பமின்மையையும், எச்சரிக்கையையும் புறக்கணித்து விட்டு மங்கள சமரவீர மற்றும் அநுர பண்டாரநாயக்க போன்றோர் சிபார்சுகள் – ஆலோசனைகளுக்கமைய ஜே.வி.பியைக் கூட்டுச் சேர்த்தமையானது ஐக்கிய தேசிய முன்னணி அரசை வீழ்த்தவும் சமாதான முயற்சிகளை அதன் மூலம் குழப்பவும் தான் என்பதை ஜனாதிபதி மறுத்தாலும் கூட அதுவே உண்மையாகும்.

தேசிய நலன் கருதியோ, வேறு ஏதாவது நியாயபூர்வமான நோக்கம் கருதியோ இந்தக் கூட்டை ஜனாதிபதி ஏற்படுத்தவில்லை என்பதும் உண்மையாகும்.

ஒரு காலத்தில் அதுவும் சிலகாலத்தின் முன்னரே... தனது கணவரான விஜயகுமாரதுங்கவைக் கொன்ற கொலைஞர்கள் எனச் சினத்துடன் குற்றஞ்சாட்டிய ஜே.வி.பியினருடன் – அரசியல் கூட்டை ஏற்படுத்தியபோதே அவர் ஒரு தடவை சாத்தான்களுடனும் கூட்டுச்சேர்ந்தாவது பயங்கரவாதிகள் என அவரால் வர்ணிக்கப் பட்ட தமது அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளுக்காகப் போராடும் தமிழ்மக்களை அழிக்கத்தயார் என்று கூறியதை மெய்ப்பித்து விட்டிருந்தார்.

இப்போது புதிய ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஆறுமாதங்கள் முழுமையாக முடியுமுன்னரே ஜே.வி.பியினர் தமது சுயத்தை வெளிப்படுத்தி அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கத் தொடங்கியுள்ளமையானது ஜனாதிபதிக்கு பலவகையிலும் தலைவலியை ஏற்படுத்தத் தொடங்கிவிட்டது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசை முதலில் பதவியில் இருந்து நீக்கவேண்டுமென்ற நிபந்தனையுடன் – ஜனாதிபதியுடன் அரசியல் கூட்டை ஏற்படுத்திக்கொண்ட ஜே.வி.பியினர். தேர்தல் முடிந்து அறுதிப் பெரும்பான்மைப் பலமற்ற ஒரு அரசு உருவான போது, கூட்டணிக்குள் ஜனாதிபதியே எதிர்பார்க்காதவகையில் ஒருபெரும் வலுவான சக்தியாக உருப்பெற்றபோதே, அவருக்கான அதிகார வலுவால் எதுவுமே செய்யமுடியாத மேலாதிக்கத்தன்மையை ஜே.வி.பி. கூட்டணிக்குள் வலுப்படுத்தத் தொடங்கியது.

ஜனாதிபதி தொலைநோக்குத் திறனுடன் ஜே.வி.பி.யினருடனான உடன்படிக்கைகளின்போது செயற்படாது, தேர்தலின் போது அவர்கள் விருப்பிற்கும், கோரிக்கைக்கும் ஏற்ப நடந்து கொண்டு அவர்களுக்கு அதிகப்படியான உறுப்பினர்கள் கிடைக்க விட்டுக்கொடுத்தமையானது, இன்று அவரை நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளது.

இன்று ஜே.வி.பி.யினர் விலகினால் ஆட்சியே கவிழும் நிலை நிரந்தரமாகிவிட்டது. அதனை வைத்தே அவர்கள் அரசுக்கும் ஜனாதிபதிக்கும் கடிவாளமிட்டு தம்மிஷ்டப்படி இயக்குபவர்களாகி விட்டனர்.

இன்று சமாதான முயற்சிகள் குறித்து ஜனாதிபதியோ, அரசோ ஜே.வி.பி.யினரின் நிலைக்கு முரணாக எந்தத் தீர்வையும் எடுக்க முடியாத ஆபத்தான சூழல் உருவாகிவிட்டது.

சமாதான முயற்சிகளை அதன் ஆரம்பம் முதலே எதிர்க்கும் ஜே.வி.பி.யினர் நோர்வேயின் அனுசரணையை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்பவர்களாக இல்லை என்பது உறுதியான விடயமாகிவிட்ட நிலையில், நோர்வேயின் நடுநிலைமை ஏற்பாட்டாளர் அல்லது அனுசரணையாளர் என்ற பணி மீது தமக்கு எந்தவித நம்பிக்கையுமில்லை என்றும், தாம் அரசு என்ற ரீதியில் இதனைத் தெரியப்படுத்த விரும்புவதாகவும் தன்னிச்சையாக நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி ஜனாதிபதிக்கும் அரசுக்கும் நெருக்கடியை ஏற்படுத்தி விட்டுள்ளனர்.

ஜே.வி.பி.யினர் – நோர்வேயை அவமதிக்கும் வகையில் பல்வேறு குற்றச்சாட்டுக்களை அந்நாட்டின் சமாதான அனுசரணைப் பணியாளர் மீது சுமத்தியுள்ளமையானது, உண்மையில் அரசின் – நோர்வே குறித்தும் அதன்பணி குறித்துமான கருத்து நிலைப்பாடா என்பதைத் தெளிவுபடுத்துமாறு நோர்வேத் தூதுவர் கேட்டு ஜனாதிபதிக்கும், வெளியுறவு அமைச்சர் கதிர்காமருக்கும் கடிதம் எழுதியுள்ளதற்கு அவர்கள் என்ன பதிலைச் சொல்லப் போகிறார்கள்?

அரசைத் தலைமை தாங்கி நடத்தவும், அதன் சார்பில் அறிக்கைவிடவும் அரசின் கருத்துக்களை தெரியப்படுத்தவும் ஜே.வி.பி.யின் ரில்வின் சில்வாவுக்கு அதிகாரம் அல்லது அங்கீகாரம் அளித்தது யார்? இதற்கான பதிலைத் தெளிவு படுத்த வேண்டியவர் அதிகார வலுவற்ற பிரதமரல்ல ஜனாதிபதியே...

அவர் என்ன சொல்லப்போகிறார்?

இந்தப் பதிலில்நோர்வே அனுசரணைப்பணியின் எதிர்காலம் மட்டுமல்ல சமாதான முயற்சிகளின் எதிர்காலமும் தங்கியுள்ளதெனலாம்.

## நாடும் நடப்பும்




செய்தி : பண்டா குடும்ப ஆட்சிக் காலத்தில் தமிழர்களுக்கு எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்படவில்லை என்கிறார் அநுரா பண்டாரநாயக்கா.

# சிறப்பாக நேற்று நடைபெற்ற வீரசிங்கம் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவாளர் வீரசிங்கம் நினைவு தினம் நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக யாழ். வீரசிங்கம் மண்டபத்திலுள்ள கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.ரட்ணம் நிகழ்த்தினார்.

தொடர்ந்து தமிழீழ நிர்வாக சேவையின் கூட்டுறவுப் பகுதி பொறுப்பாளர் பொ.புஸ்பகுமார் உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் -

கடந்தகால இராணுவ நடவடிக்கை காரணமாக சேதமாக்கப்பட்ட வீரசிங்கம் மண்டபத்தைப் பற்றியும் அதன் தற்போதைய பொலிவு பற்றியும் கூறினார்.

இதன்னைத் தொடர்ந்து சித்திரப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்ற கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவன் செல்வன் ரி.கஜேந்திரனுக்கு பரிசில் வழங்கப்பட்டது.

தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் சிறந்த கூட்டுறவு சங்கங்களாகத் தெரிவு செய்யப்பட்ட சங்கங்களுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. சிறந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவில் - முதலாவது இடத்தை அச்சுவேலி ப.நோ.கூ சங்கமும், இரண்டாவது இடத்தை கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும், மூன்றாவது இடத்தை தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் (கொடிகாமம்) பெற்றுக்கொண்டன.

சிறந்த பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவில் - முதலாவது இடத்தை கோண்டாவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும், இரண்டாவது இடத்தை அச்சுவேலி ப.தெ.வ.கூ. சங்கமும், மூன்றாவது இடத்தைப் பண்டதரிப்பு ப.தெ.வ.கூ. சங்கமும் பெற்றுக்கொண்டன.

சிறந்த சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவில் - முதலாவது இடத்தை சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கமும், இரண்டாவது இடத்தை ஸ்ரீ முருகன் ஐக்கிய நாணய சங்கமும், மூன்றாவது இடத்தை அல்வாய் நக்கீரன் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச்சங்கமும் பெற்றுக்கொண்டன.

இறுதியாக நன்றியுரையை கூட்டுறவுச் சபை செயலாளர் பொ.சண்முகசுந்தரம் நிகழ்த்தினார்.

கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் நேற்றைய நினைவு தின நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஐயாத்துரை, கூட்டுறவுச் சங்க பணியாளர்கள், கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் மகளிர்குழு உறுப்பினர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த)

## உதவிப்பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

இந்துசமய அலுவல்கள் அமைச்சு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளர் பதவிக்கு (இலங்கை நிர்வாகசேவை சாராதது) தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்துநாகரிகம், இந்துசமயம், இந்துகலாசாரம் ஆகிய பாடங்களில் ஏதாவது ஒன்றைப் பிரதானமாகக் கொண்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடைய பட்டதாரிகள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். 22 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. தற்பொழுது அரசசேவையில் உள்ளவர்களுக்கு இந்த வயதெல்லை பொருந்தாது.

விண்ணப்பங்கள் யாவும் அடுத்த மாதம் 28 ஆம் திகதிக்கு முன் பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248 1/1 காலி வீதி, கொழும்பு - 4 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். தெரிவுகள் எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைகளினூடாக நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களை இந்தமாதம் 3 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியில் பார்வையிடலாம்.(31)

## உடத்தலவின படுகொலை வழக்கு ஜனவரி 5 இற்கு ஒத்திவைப்பு!

(கொழும்பு)

கடந்த 2001 பொதுத் தேர்தல் தினத்தன்று உடத்தலவின்னப் பகுதியில் முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடரபான வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணைகளின்போது இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, அவரது மகன்களான லொகான் ரத்வத்த, சானுகா ரத்வத்த மற்றும் 13 பேர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பான சாட்சிகள் மற்றும் தடயங்க ளைச் சமர்ப்பிப்பதற்காக இந்த வழக்கை எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க மூன்று நீதிபதிகள் அடங்கிய ரயல் - அட் - பார் நீதிமன்றம் உத்தரவிட்டது.

# வடமராட்சி கிழக்கு கிராமங்கள் மழைவெள்ளத்தில் மூழ்கின

## இடம்பெயரும் நிலையில் மக்கள்

கடந்த இரு நாட்களாகத் தொடர்ந்து பெய்த மழையினால் வடமராட்சிக் கிழக்குப் பிரதேச கிராமங்கள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மாமுனை தொடககம் கட்டைக்காடு வரையான கடற்கரை வீதி மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால், இந்த வீதியூடாகப் போக்குவரத்து செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

புளியங்குளம், முகமாலை பிரயாணிகள் பேரூந்துச் சேவைகள் நடைபெறவில்லை. கடற்கரையோரக் கிராமங்களில் உள்ள வீடுகள் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையால் மக்கள் இடம் பெயரும் நிலை ஏற்பட்டுள்ளது. கடும் காற்றுக் காரணமாக கடல் கொந்தளிப்பாகவுள்ளமையால், கடற் தொழிலாளர்கள் கடலுக்குச் செல்லவில்லை. வயல்களில் மழை நீர் தேங்கி எங்கும் கடல் போல் காணபபடுகிறது.

தொண்டமனாறு - ஆனையிறவு கடல் நீர் ஏரியில் மழைநீர் நிரம்பியுள்ளதால் வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி கிழககுப் பகுதிக் கிராமங்களில் கடல் நீர் ஏரிக்கு அண்மையில் உள்ள மக்கள் இடம் பெயரும் நிலை ஏற்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் மாசார், சோரன்பற்று, முகாவில் கிராமங்களில் மழை வெள்ளம் காரணமாக மக்கள் இடம் பெயரும் நிலை ஏற்பட்டுள்ளது. தாளையடி, புதுக்காடு வீதியில் மாசார், சோரன்பற்று பகுதிகளில் வெள்ளம் பாய்கின்றது .

பளை சந்தைப்பகுதி, பழைய பஸ் நிலையப் பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளது. மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் பிரயாணிகள் பெரும் கஷ்டத்தின் மத்தியில் பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். புதுக்காடு - பளை வரையான ஏ9 வீதியில் தர்மக்கேணி, வண்ணான்கேணி பகுதியில் வீதியை மூடி வெள்ளம் பாய்கின்றது. ஏ-9 வீதியில் வாகனப்போக்குவரத்து குறைவாகக் காணப்படுகிறது. (21)

தெற்குத் திசையினிலே

இந்திரஜித்

# விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்ற தொனியில் முயற்சிக்கும் அரசாங்கம்



தென்னிலங்கையில் இன்று இனப்பிரச்சினைத் தீர்வைக்காட்டிலும் அரசாங்கத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளே பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதன் காரணமாக ஏற்படப்போகும் பின்விளைவுகள் பற்றிச் சிறிதேனும் அரசாங்கம் அலட்டிக்கொள்வதாக இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரது மாவீரர் தின உரையானது இலங்கை அரசை சிந்திக்க வைத்துவிட்டது என்பது உண்மை. ஆனால், விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்ற தொனியில் காட்டவே அரசாங்கம் முயற்சிக்கிறது.

தாம் வடக்கு - கிழக்கு இடைக்கால தன்னாட்சி தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தத் தயார். ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகள் எனக்கூறி இடைக்காலத் தன்னாட்சி குறித்து பேச்சு நடத்துவதற்காக, அரசாங்கத்துக்கு விடுத்த அழைப்பு அச்சுறுத்தும் மொழியில் இருப்பதாக அரசாங்கம் தெரிவிக்கிறது.

இது உண்மையில் முன்னர் கடைப்பிடித்து வந்த கொள்கைகளுக்கும், தற்போதைய



கொள்கைகளுக்கும் பாரியளவில் வித்தியாசங்கள் இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது. முன்னர் இடைக்கால தன்னாட்சி தொடர்பாகப் பேச்சுவார்த்தையை நடத்தும் அதேநேரம், நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையையும் முன்கொண்டுசெல்லவேண்டும் என்ற நிபந்தனையை அரசாங்கம் விதித்து வந்தது.

அதனை தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றாக நிராகரித்திருந்தனர். இந்த நிலையில் மாவீரர் தின உரையின் பின்னர் தமது வசன அமைப்பை மாத்திரம் அரசாங்கம் வெளியிட்டுள்ளது. அதாவது இதுவரை காலமும் இடைக்காலத் தன்னாட்சியுடன் நிரந்தரத் தீர்வுக்காண பேச்சுவார்த்தை எனக்கூறி வந்த அரசாங்கம், தற்சமயம் வடபகுதி மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகளுக்காக இடைக்காலத் தீர்வுப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு தாம் தயார் என்றும் -அதே நேரம், நோர்வேயின் இணக்கத்தின் அடிப்படையில் நிரந்தரமான சமஷ்டித் தீர்வுக்குத் தாம் தயாராக இருப்பதாகவும் தொரிவித்துள்ளது.

இது இடைக்கால நிர்வாக நடைமுறையில் அரசாஙகம் எந்தளவு உறுதியாக நடந்து கொள்கிறது என்பதைக் காட்டிநிற்கிறது. அதனையடுத்தே நிரந்தரத் தீர்வைப் பற்றிப் பேசலாம் என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின நிலைப்பாட்டுக்கு மாறாகவே அமைநதுள்ளது. அதாவது, இடைக்கால நிர்வாகப் பேச்சுவார்த்தை நடைபெற்று, அது நடைமுறைப்படுத்தப்படும் காலகட்டத்தில் நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுவார்த்தை நடத்தபபடுமா? அல்லது இடைக்காலத் தன்னாட்சிக்குரிய பேச்சுவாரத்தைகள் நடைபெறும் போதே நிரந்தத் தீர்வுக்கான பேச்சுக்கள் நடத்தப்படுமா என்பதை அரசாங்கம் தெளிவாக வெளியிடவில்லை.

எனவே, அரசாங்கம் தமது மயக்க நிலையை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது. இது சர்வதேசத்துக்கு தமது பக்கத்தைச் சரி எனக் காட்டும் என்ற உத்தி எனச் சொல்லப்பட்டாலும், ஏனைய வருடங்களைப்போல இந்த வருட மாவீரர் தின உரை குறித்து சர்வதேச நாடுகள் உடனடியாகத் தமது கருத்துக்களை வெளியிடாமையானது அரசாங்கத்துக்கு கவலையையே தந்துள்ளது.

இது முற்றாக அரசாங்கத்தின் விட்டுக்கொடுக்காத தன்மையையும், ஸ்திரத்தன்மையின்மையையும் மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது. தற்சமயம் தமது அரசாங்கத்தின் பெரும்பான்மையை அதிகரித்துக் கொள்வதற்காக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தமது வசப்படுத்தும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுவருகிறது.

அதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஊழலற்ற நிர்வாகத்தை நடத்தப்போவதாக ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் - கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் ஊழல்களில் ஈடுபட்டதாகக் கூறப்பட்ட அமைச்சர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பயமுறுத்தி தம் வசப்படுத்தும் முனைப்பை மேற்கொண்டு வருகிறது.

இது தமது அரசாங்கத்துக்குள்ளும் பலாத்காரமாக ஊழல்களை வரவழைத்துக்கொள்ளும் ஒரு நடவடிக்கை என அரசாங்கத்துக்குத் தெரிந்திருந்தும் அதனைப் பொருட்படுத்தாது தமது பலத்தை நாடாளுமன்றத்தில் அதிகரிக்கும் நோக்கை மாத்திரம் அரசாங்கம் முன்னகர்த்திச் செல்கிறது. ஜனாதிபதியின் நிர்வாகத்துக்கும், ஜே.வி.பிக்கும் வேற்றுமையில் ஒற்றுமை காணப்பட்டது. எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியைத் தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கம் இரண்டு தரப்புக்கும் இருந்தது.

அதனடிப்படையிலேயே இரண்டு தரப்பும் அரசாங்கம் ஒன்றை நிறுவும் அளவுக்கு முன்னேறின. ஆனால், இடையில் அந்த இரண்டு தரப்புக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அடிப்படையில் உள்ள முறுகல்கள் அரசாங்கம் வீழ்ந்து மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்பதைக் காரணமாகக் கொணடு மூடிமறைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாகத் தனியார் மயத்துக்கும், அதேபோல் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக யோசனைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் ஜே.வி.பி, அதன் பிரசாரங்களைச் செவ்வனே செய்து கொண்டிருக்கிறது.

ஆனால், ஜனாதிபதியோ - ஜே.வி.பி ஏதோ தமது கொள்கையுடன் ஒத்துப்போவதாகவும், தமிழீழ விடுதலைப் புலிகளே விட்டுக் கொடுப்பை மேற்கொள்கிறார்கள் இல்லை என்ற நிலைப்பாட்டை வெளியில் காட்டி வருகிறார்.

இதற்கு உதாரணமாக அண்மையில் ஜே.வி.பியின் ஒரு அங்கமான தேச இததைசி எனப்படுகின்ற தேசப்பற்றாளர் அமைப்பின் பிரசாரத்துக்காக அந்த கட்சியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச லண்டன் சென்றிருந்தபோது அங்கு ஜனாதிபதிக்கு விருப்பமானால் வடக்கு - கிழக்கு இடைக்கால தன்னாட்சி தொடர்பில் பேச்சுவார்த்தையை நடத்தலாம். அதற்குத் தாம் தடையில்லை என எச்சரிக்கைப் பாணியிலான கருத்தை வெளியிட்டிருந்தார்.

ஜனாதிபதி அவ்வாறு செய்தால் தாம் அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்வோம் என்பதே அதன் கருத்தாக இருந்தது. ஆனால், அதனை ஜனாதிபதி தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு ஜே.வி.பியினரும் இடைக்கால நிர்வாக யோசனைக்குத் தடையில்லை எனக் கூறியிருப்பதாக அரச தொலைக்காட்சி செவ்வியொன்றில் தெரிவித்தார்.

எனவே அரசாங்கம் மக்களை மாத்திரம் அல்ல, தம்மைத்தாமே ஏமாற்றிக்கொள்ளும் முறையையும் மேற்கொண்டுவருகிறது. இதற்கிடையில் சமாதான முயற்சிகளுக்காகவே அரசாங்கத்துக்கு முண்டுகொடுக்கத் துணிந்ததாகக் கூறி அதில் இணைந்துக்கொண்டுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக்குழுவினர் ஆகியோரைப் பயன்படுத்தி அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சிக் கோரிக்கையை மழுங்கடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

எனவே, இங்கு சமாதானம் தேடிச்சென்ற கட்சிகள அரசாங்கத்துடன் இணைந்ததன் காரணமாக சமாதானத்துக்கு எதிரான, குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளுக்குத் துணைபோகவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இதற்கு மத்தியில் ஐக்கிய தேசிய கட்சி-அரசாங்கத்திடம் இருந்து, தன்னை தமது



நாடாளுமன்ற உறுப்பினர்களைக் காப்பாற்றிக் கொள்ளும இக்கட்டான நிலைக்கு, அதேநேரம் சில ஊழலற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கொண்டு அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களைச் செய்யும் நிலைக்கு சென்றுள்ளது. இது அதன் இக்கட்டை நன்றாகவே தெளிவுபடுத்தி நிற்கின்றது.

---

சமூகவியல்

ஆர்.கே.மேனன்

# மனிதம் இங்கே நலிந்து போனதால் மனித உயிர்கள் பெறுமதியற்றுவிட்டன

பக்தி தர்மம் அறம் போன்ற நற்பண்புகளோடு ஆட்சிசெய்து பசுவின் துன்பத்தைப் போக்க தன் மகனை இழந்த மனுச் சோழனின் காலம் மலையேறிப்போய், மனிதனை மனிதன் கொல்லுகின்ற கலியுக காலம் தற்போது கரையொதுங்கியுள்ளது. நாளுக்கு நாள் உயிர்க் கொலைகள் கற்பழிப்புக்கள், கடத்தல்கள் ஆயுத அச்சுறுத்தல்கள், வாள் வெட்டுக்கள், கோஷ்டி மோதல்கள் என்று அதிகரித்துக் கொண்டே போகின்றது.

எமது தாய்த் தமிழ்நாட்டில் பத்திரிகைக்களைத் திறந்தவுடன் பார்க்கமுடியாத பண்பாட்டுச் சீரழிவுகள், பதறப்பதறக் கொலை செயயப்பட்ட அப்பாவிக் கொலைச் சம்பவங்கள் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. இப்படியே போனால் எமது சமுதாயத்தின் எதிர்காலம் என்ன?.... இந்தச் சம்பவங்களுக்கெல்லாம் அடிப்படை என்னவெனில் 'மனிதம்' இங்கே மலிந்து விட்டது. என்றே கூறவேண்டும்.

மனிதத் தன்மையென்பது தற்போது மறுவடிவம் பெற்றுவிட்டது. ஆணவம், பழிக்குப் பழி வாங்கல்கள், மற்றவரைச் சுரண்டி வாழ்தல், பொறாமையின் வெளிப்பாட்டுச் செயற்பாடுகள், பொதுநலமற்ற சுயநலப்போக்கு, மற்றவன் துன்பத்தில் இன்பம் காணல், பொருளாசையால் உத்தம உறவுகளை மறந்து உயிர்க்கொலை வரை செல்லல், போன்ற அடிப்படை உள நிலைகள் மேலோங்கி உயிர்களுக்கே பெறுமதியற்று பல உயிர்க் கொலைகள் இன்று நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன.

உண்மையிலேயே இதில் கவலைக்குரிய விடயம் என்னவெனில் - தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒரு போர்ச் சூழலில் வாழ்கின்றோம் என்பதையே மறந்து, எமக்குள்ளே நாம் எத்தனையே உயிர் இழப்புக்களைச் சந்தித்துக் கொண்டு வாழ்கின்றோம். அன்னியவன் தமிழ் மக்களை அனைத்து வழிகளாலும் பலவீனப்படுத்தவேண்டும் என்ற சதிச் செயல்களுக்கு இடமளித்து வாழ்கின்றோம்.

எமது சமுகத்தின் பொருளாதாரக் கல்வியின் நகர்வுகளை மழுங்கடிக்கவேண்டும் என்ற பல திட்டச் செயல்களுக்கு இடமளித்து வாழ்கிறோம். தற்போதைய யாழ். மாவட்ட கல்வியியல் வளர்ச்சி வீதத்தரவுகளை எடுத்து நோக்குவோமாயின், எப்படி இருந்த கல்வி நிலை இன்று எவ்வாறு வீழ்ச்சிகண்டுள்ளது என்பது புலனாகும்.

இதைவிட அடுத்தவனின் நிம்மதியான வாழ்விற்காக பதினேழாயிரத்து அறுநூற்று ஐம்பது தமிழ் இளைஞர்கள் மாவீரர்களானார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பு நூற்று முப்பது தமிழ் இளைஞர்கள் மாவீரர்கள் ஆக்கப்பட்டார்கள். இதைவிட அங்கவீனர்களானோர் எத்தனை பேர், போர்ச் சூழலால் இறந்த அப்பாவிப் பொது மக்கள் எத்தனை பேர், இப்படிப்பட்ட நியாயமற்ற உயிர் இழப்புக்கள் எம் இனத்தை அழித்துக்கொண்டிருப்பது ஒரு புறமிருக்க, எமகுள் நாமே அழிந்து கொண்டு இருக்கின்றோம் சில மனிதத் தன்மையற்ற செயல்களால்.

அண்மையில் இடம்பெற்ற சில ஊடகவியல் தரவுகளை உற்றுநோக்கிப் பார்த்தோமானால் புரியும் எமது இனத்தின் அழிவுப் பாதை எங்கே போகிறதென்று. கோஷ்டி மோதல்களால் இழந்த உயிர்கள் எத்தனை, சாதிச் சண்டைகளால் சிந்திய இரத்தங்கள் எத்தனை, எம்மூரில் அடுத்தவன் வால் காட்டுவதா என்று 'தலை நிமிர்த்தி, எத்தனை தலைகள் சரிகின்றன? அந்தக் கணப்பொழுதிலாவது எம் இனம் அழிகின்றது என்று பொதுநோக்கில் யாரும் சிந்திக்கிறீர்களா? உடன்பிறந்த சகோதரத்தையே நில உறுதிச் சண்டைக்காக உயிர்க்கொலை செய்யும் எமது சமுகத்தில் இன அழிவைப் பற்றி எப்படிப் பேசுவது!...

இப்படியாக எமது சமுகம் விகாரப்பட்ட மன எழுச்சியோடு செல்வதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றைச் சற்று ஆராய்வதன் ஊடாக இவற்றுக்கான தீர்வு சற்று சிந்திப்போம்.

### வேலைப் பளுக்கள்

கூட்டுக் குடும்பமாக இருந்து, குதர்க்கம் பேசிக் கும்மாளமடித்த உறவுகள் பாசங்களின் உன்னத காற்றைச் சுவாசித்த காலம் மலையேறிப்போய், குடும்பத்திலுள்ள ஒருவரையொருவர் சந்திப்பதற்கே நேரமற்று ஒரு இயந்திர உலக இருள் சூழ்ந்துவிட்டது. இதனால் உறவுகளின் உன்னதத் தன்மை (அன்பு, பாசம்) என்பவற்றுக்கே இடமில்லாது, பரிமாற வழியில்லாது சுயநலப் போக்கோடுகூடிய ஒரு சுயநல வாழ்க்கை உருவாகியதால் மனிதம் இங்கு மலிந்துவிட்டது.

இந்த வேலைப் பளுக்கள் காரணமாகவும், சமநிலையற்ற ஆளுமைகளாலும் சிறிய சிறிய மன நெருக்கீடுகள். பாரிய முரண்பாடுகளை உருவாக்கி உயிர்க்கொலைவரை சமூகத்தை வழிநடத்திச்சென்றுவிட்டது.

### போர்ச்சூழல்

தற்போது இருபது ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்றுவருகின்ற போர்ச்சூழலால் சிறிய வயதில் இருந்தே வன்முறைக்கூடாக வழிநடத்தப்படுகின்ற இளைஞர்களுக்கு மனித உயிர்களின் பெறுமதி புரியாத அளவுக்கு மனுத்தன்மை புடமிடப்பட்டுவிட்டது. இதனால்தான் அற்பபோலி சுய கௌரவங்களுக்காக மனிதாபிமானத்தை மடக்கிவைத்துக் கோஷ்டி மோதல்களில் இறங்கி சமூகத்தின் சந்ததிகளை அழிக்கின்றனர்.

### பொருளாதார நெருக்கீடு

முதலீடு செய்யப் பணமில்லை, அரச தொழிலுக்கு வாய்ப்பில்லை, பட்டம் பெற்றவனே பட்டதாரி சங்கத்தில் தவிக்கின்றான் என்றால்-மற்றவன் வாழத் தொழில் எங்கே கிடைக்கப் போகின்றது. கடன்பட்டு, முதலீடு செய்தாலும் போர்ச்சூழலால் போதுமானளவு ஆதரவு கிடைக்காது. சொந்தக்காலில், சுய கௌரவங்களோடு வாழவேண்டிய இளம் சந்ததியினர் வாழவழியின்றித் தனிமனித முரண்பாடுகளில் தவிக்கின்றனர். இதன் விளைவாக களவு, கொள்ளை, கடத்தல், தெருவோரங்களில் அரட்டை அடித்தல், தீய பழக்கங்களுக்கு மனவிரக்தியால் அடிமையாதல், கௌரவத்தைப் பேணமுடியாத நிலையில் கௌரவத்தை இழக்கின்ற சில சம்பவங்களை நிகழ்த்துகின்றனர்.

மனிதம் மலிந்ததற்கு இப்படிப்பட்ட மாற்றுக் காரணங்கள் பலவாக இருந்தாலும்-இதற்காக மனித உயிர்களின் பெறுமதியை இழக்க எவரும் அனுமதிக்கக்கூடாது. சற்று ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள். பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றுதான் வாழ்கின்றோமே தவிர எமது பிறப்பின் அர்த்தம் என்ன என்று யாரும் சிந்திக்கின்றோமா? முரண்பாட்டைக் கண்டு வாழ்வைச் சலித்துக் கொள்கிறோம். வளர்க்கப்பட்ட, விகாரமடைந்த ஆளுமையைச் சீர்படுத்த நாம் மறுக்கின்றோம். இறைவன் படைத்த மனித உயிருக்கு நாமே நியாயங்கள் வழங்கும் நீதி தேவதையாக மாறுகின்றோம். அது எப்படிப் பொருத்தமானது?

எமது அடிப்படை என்ன, எமது பிறப்பின் அர்த்தம் என்ன, எமது எதிர்காலம் என்ன, இந்த வாழ்வு நிலையானதா என்றெல்லாம் சிந்தித்தோமானால், ஆணவம் அடியோடு அழிந்துவிடும். அடியோடு அழிக்கப்பட்ட பல நாடுகள் இன்று அபிவிருத்தி கண்டு அதிகாரம் பேசுகின்றன.

ஆனால், நாமோ அடுத்தவரைப் பற்றியும், அநியாயங்களையும், அவதூறுகளையும் சிந்தித்ததால்தான் அன்றுதொட்டு இன்றுவரையும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடாக இருந்துவருகின்றோம். சுயமுயற்சி, சுய சிந்தனை, சுய முன்னேற்றம் என்பது எமது சமூகத்தில் அறவே அழிந்துபோய்விட்டது. வன்முறைதான் வாழ்க்கை என்று வாழ்கின்றோம். இது மாறவேண்டும். 'மனிதம்'' இங்கே மதிக்கப்படவேண்டும். உயிர்களின் பெறுமதி உயர்வு பெறவேண்டும்.

# ஈராக்கில் இருவேறு தாக்குதல்கள்; 21 பேர் பலி, 31 பேர் படுகாயம்!



(பாக்தாத்)

ஈராக்கின் திக்ரிற் மற்றும் பீஜி ஆகிய நகரங்களில் இடம்பெற்ற இருவேறு தாக்குதல்களில் நான்கு ஈராக்கிய தேசியக் காவற்படையினர் உட்பட 21 பேர் கொல்லப்பட்டதுடன், 31 பேர் படுகாயமடைந்தனர்.

ஈராக்கின் திக்ரிற் நகரத்தில் உள்ள அமெரிக்க இராணுவ முகாம் ஒன்றில் வேலை செய்யும் ஈராக்கிய பொதுமக்களை, பஸ் ஒன்றில் ஏற்றிச்சென்ற வேளையில் இரண்டு கார்களில் வந்தவர்கள் பஸ்சில் பயணம் செய்தவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதனால் பஸ்ஸில் பயணம் செய்த ஈராக்கிய பொதுமக்கள் 17 பேர் கொல்லப்பட்டதுடன் 13 பேர் படுகாயமடைந்தனர்.

குறிப்பிட்ட பஸ்ஸிற்கு அமெரிக்கப்படையினர் இருவர் பாதுகாப்பு வழங்கிச் சென்ற வேளையிலேயே தீவிரவாதிகள் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

பஸ்ஸை வழிமறித்த தீவிரவாதிகள் தம்மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன், பஸ்ஸினுள்ளே கைக்குண்டுத் தாக்குதல்களையும் மேற்கொண்டதாகச் சம்பவத்தில் காயமடைந்த ஈராக்கியர் ஒருவர் தெரிவித்தார்.

இதேசமயம், ஈராக்கின் பீஜி நகரத்தில் ஈராக்கிய தேசிய காவற்படையினரின் சோதனைச்சாவடி ஒன்றின் மீது ஈராக்கிய தீவிரவாதிகள் மேற்கொண்ட தற்கொலைக் கார்க்குண்டுத் தாக்குதலில் 4 ஈராக்கிய தேசிய காவற்படையினர் கொல்லப்பட்டு 18 பேர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை, சமரா நகரத்தில் தீவிரவாதிகள் மேற்கொண்ட மற்றொரு தாக்குதலில் ஈராக்கியப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன், பாக்தாத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு ஒன்றில் இரண்டு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.

அத்துடன், மொசூல் நகரத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அமெரிக்கப் படையினர் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டனர்.

ஈராக் மீது போரை ஆரம்பித்தது முதல், இதுவரையில் இடம்பெற்ற தாக்குதல்களில் 1,271 அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேசமயம் மொசூல் நகரத்தில் பதுங்கியிருந்த 64 ஈராக்கிய தீவிரவாதிகளைத் தாம் கைதுசெய்துள்ளதாக அமெரிக்க கூட்டணிப் படைகள் தெரிவித்துள்ளன.




# காஷ்மீரில் கண்ணிவெடித் தாக்குதல்; 12 இந்திய படையினர் ஸ்தலத்தில் பலி



(காஷ்மீர்)

காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகள் தொடர்ந்து படையினர் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இராணுவ முகாம்கள் மீதும் கடந்த சில நாட்களாகத் தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரித்து வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 5 மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினர் பலியானார்கள்.

30 மணி நேரத்துக்கும் மேலாக இராணுவத்தினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சமர் நடந்தது. இதில் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் தெற்கு காஷ்மீரில் தீவிரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று நள்ளிரவு புல்வாமா கிராமத்தில் இராணுவத்தினர் காரில் சென்று கொண்டிருந்த போது தீவிரவாதிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்.

அந்தப் பாதையில் வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டை தூரத்தில் இருந்தபடி தீவிரவாதிகள் வெடிக்கச் செய்தனர்.

இதில் அந்தக் கார் சுக்குநூறாக சிதறியது. காரில் இருந்த இராணுவ வீரர்களில் 12 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். காரை ஓட்டி வந்த சாரதியும் பலியானார்.

பலியானவர்களில் ஒருவர் இராணுவ உயர் அதிகாரி. இந்தத் தாக்குதலில் மேலும் 4 பேர் காயமடைந்தனர். தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

# கஸகஸ்தான் சுரங்கத்தில் வெடிவிபத்து 23 தொழிலாளர்கள் உடல் கருகி பலி!

(கரங்கண்டா)

கஸகஸ்தான் கரங்கண்டா மாநிலத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற பாரிய வெடி விபத்தில் 23 சுரங்கத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டதுடன், 3 தொழிலாளர்கள் படுகாயமடைந்தனர்.

கஸகஸ்தானின் மத்திய பகுதியில் உள்ள சக்தின்சகாயா என்ற இந்த நிலக்கரிச் சுரங்கத்தில் வெடி விபத்து எற்பட்ட சமயம் 80 சுரங்கத் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

சுரங்க பின் பகுதியில் இந்த வெடி விபத்து ஏற்பட்டதால் அந்தப் பகுதியில் தொழிலில் ஈடுபட்ட 23 பேர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர்.

இந்த வெடிவிபத்தினையடுத்து ஏனைய தொழிலாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாக, அவசரகால அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

பெரும்பாலான சடலங்கள் எரிந்த நிலையிலேயே மீட்கப்பட்டதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இதுவரையில் வெடிவிபத்திற்கான காரணம் கண்டறியப்படாத போதும், சுரங்கத்திலுள்ள குழாய்களில் ஏற்பட்ட வாயுக்கசிவே வெடிவிபத்திற்குக் காரணமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெடிவிபத்துத் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் பிரிட்டன் பிரதமருடன் பேச்சு!



லண்டன் சென்றுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் பிரதமர் ரொனி பிளேயரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இவர்கள் இருவரது இந்தச் சந்திப்பில் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மற்றும் சர்ச்சைக்குரிய காஷ்மீர் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் ஐந்து நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார். இதில் முதலில் தென் அமெரிக்க நாடுகளுக்கும் பின்னர் அமெரிக்காவுக்கும், அதன்பின்னர் தற்போது இறுதியாக ஐரோப்பிய நாடுகளுக்கும் தனது சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்கா சென்ற முஷாரப், அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது அல் - கொய்டா அமைப்பினருக்கு எதிராக முஷாரப் எடுத்துவரும் நடவடிக்கைகளை அதிபர் புஷ் பாராட்டினார்.

அமெரிக்க விஜயத்தின் போது முஷாரப், பலஸ்தீன நாட்டின் பிரச்சினைக்கான தீர்வு குறித்த அமெரிக்க அதிபரின் ஆதரவையும் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் தற்போதைய உலகமயமாக்கலில் பயங்கரவாதத்திற்கெதிரான போரை நடத்திக்கொண்டிருக்கையில் இஸ்ரேல் - பலஸ்தீனத்தின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியது அவசியமானதெனவும், தற்போதைய உலகம் அமைதியையே விரும்புகின்றதெனவும் முஷாரப், புஷ்ஷிற்குத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அதிபர் புஷ், மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்த தற்போது நல்லதொரு வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும், எனவே இதற்கு இணைந்து செயற்படுவதென பாகிஸ்தான் ஜனாதிபதிக்குத் தான் உத்தரவாதமளித்துள்ளதாகவும், அத்துடன் தனது நிர்வாகத்தில் மத்திய கிழக்கிற்கான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுமென தான் கூறியதாகவும் தெரிவித்தார்.

## எகிப்தின் சிறையிலுள்ள இஸ்ரேலிய உளவாளி விடுவிக்கப்படவுள்ளார்

எகிப்தில் சிறை வைக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய உளவாளி ஒருவர் விடுதலை செய்யப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த ஏழு வருடங்களுக்கு முன் எகிப்தில் வைத்து கைது செய்யப்பட்ட இவரது பெயர் அசாம் அசாம் எனவும், இவர் செய்த குற்றத்துக்காக இவருக்கு 15 வருட சிறைத் தண்டனையை 1997 ஆம் ஆண்டு எகிப்திய அரசாங்கம் விதித்தது.

கடந்த ஓகஸ்ட் மாதம் இஸ்ரேல் படையினரால் கைதுசெய்யப்பட்ட ஆறு எகிப்திய மாணவர்களை இஸ்ரேல் விடுதலை செய்வதற்குப் பதிலாகவே இஸ்ரேலிய உளவாளி விடுதலை செய்யப்படவுள்ளதாகப் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், அசாமிற்கு உதவி புரிந்த எகிப்தியரான இமாட் அப்டெல் - ஸமீட் இஸ்மெயில் என்பவருக்கு 25 வருடசிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இஸ்ரேலிய உளவாளியான அசாம் புடவை வியாபாரியாவார். இவர் எகிப்திலிருந்து அந்நாட்டின் தொழிற்துறை தொடர்பான தகவல்களைப் பெண்களின் உள்ளாடைக்குள் எழுதி இஸ்ரேலிய புலனாய்வுத் துறையான மொசாட்டிற்கு அனுப்பி வந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

அத்துடன், எகிப்திய புலனாய்வுத்துறையுடனும் இவர் தொடர்புகளைப் பேணி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஈராக் தேர்தலுக்கான பாதுகாப்பை அந்த நாட்டுப் படைகள் வழங்குமா?

## அமெரிக்க இராணுவ அதிகாரி கவலை தெரிவிப்பு



(பாக்தாத்)



ஈராக்கில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கான பாதுகாப்பை அந்த நாட்டுப் படைகள் வழங்குவதற்கான தகுதியைக் கொண்டுள்ளனவா என அமெரிக்கப் படைகளின் உயர் அதிகாரியான ஜெனரல் ஜோன் அபிசாட் கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பா∴ரெய்னில் நடந்த பிராந்திய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

அமெரிக்கப் படையினர் உதவியின்றி இந்தப் பாதுகாப்புப் பணியை மேற்கொள்வதற்கு ஈராக்கியப் படைகளுக்குப் போதிய பயிற்சியோ, அனுபவமோ இல்லை.

ஈராக்கிற்குள் அத்துமீறி ஊடுருவும் வெளிநாட்டுக் கிளர்ச்சிவாதிகளை அயல் நாடுகள் கட்டுப்படுத்த வேண்டும். இதிலும் குறிப்பாக சிரியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் முக்கிய பங்காற்ற வேண்டும்.

ஈராக்கில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதில் எவ்வாறு அயல் நாடுகளுக்கு முக்கிய பங்குள்ளதோ, அதுபோல ஈராக்கிலுள்ள மக்களுக்கும் இதில் முக்கிய பங்குள்ளது.

ஈராக்கின் ஸ்திரத்தன்மைக் கெதிராக, அயல் நாடுகள் தொடர்ந்தும் இந்தக் குழுக்களை ஈராக்கிற்குள் செல்ல அனுமதிக்குமாக இருந்தால் நாம் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்.

முன்னாள் ஆட்சிக்கால உறுப்பினர்கள் கிளர்ச்சிவாதிகளுக்கான பணம் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்றனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

அத்துடன் இவ்வாறு உதவி செய்யும் சிரிய அரசாங்கத்தை, உடனடியாக இந்த உதவியை நிறுத்துமாறு நாம் கேட்டுள்ளோம்.

அத்துடன், ஈராக்கியப் படையினரின் முன்னேற்றம் என்பது மிகவும் மெதுவாகவே உள்ளது.

எனவே ஈராக் படைகளின் தொகையை அதிகரிக்க வேண்டியுள்ளது. இதனுடன் ஈராக் படைகளுக்கான பயிற்சிகளும் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளதுடன், எல்லைப் பகுதி பாதுகாப்பும் மேம்படுத்தப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனவரி மாதம் ஈராக்கில் நடைபெறவுள்ள தேர்தலை முன்னிட்டு அங்கு அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமென பென்ரகன் அறிவித்துள்ள நிலையில் - தற்போதைய ஈராக்கிய நிலைமை தொடருமாக இருந்தால், அங்கு தேர்தலை நடத்துவது சாத்தியமற்றதென ஐ.நாவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திட்டமிட்டபடி ஈராக்கில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனில்- அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேம்பாடடைய வேண்டுமெனவும், ஐ.நா. செயலர் கொபி அனானின் ஆலோசகரான லக்தர் பிராமி தெரிவித்தார்.

அத்துடன், ஈராக்கில் சட்டம் ஒழுங்கை மேம்படுத்த சர்வதேசம் உதவிபுரிய வேண்டுமெனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை நேற்றுமுன்தினம் ஈராக்கில் கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் 6 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

யாழ். குடாநாட்டில்

# 24 மணிநேரத்தில் மட்டும் 103.4 மி.மீ மழை வீழ்ச்சி



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நேற்றுக்காலை 9 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மட்டும் 103.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியிருப்பதாக கொழும்பு வளிமண்டலவியல் திணைக களம் அறிவித்துள்ளது.

அத்துடன் நேற்று நண்பகல் வெளியிடப்பட்ட அறிக்கையின் படி அடுத்த 24 மணி நேரத்தில் வடக்கு, கிழக்கு, வடமத்தி,ஊவா மாகாணங் களில் பரவலான - காற்றுடன் கூடிய மழை பெய்யவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நேற்றுக்காலை 9 மணியுடன் முடிவுற்ற 24 மணிநேரத்தின் காலநிலை விபரம்!

| அவதான நிலையம் | கூடிய வெப்ப நிலை°C | குறைந்த வெப்ப நிலை°C | மழை வீழ்ச்சி மீல்லிமீற்றர் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 24.4 | 22.4 | 103.4 |
| மட்டக்களப்பு | 29.5 | 24.2 | 0 |
| மன்னார் | 25.7 | 23.2 | 4.6 |
| பொத்துவில் | 31.1 | 23.6 | - |
| திருகோணமலை | 27.7 | 24.1 | 5.4 |
| வவுனியா | 28.8 | 21.9 | 6.1 |
| கொழும்பு | 29.9 | 24.2 | 0 |

## நாட்டை யுத்தத்துக்கு...

வைத்துப் பேச்சுக்களை ஆரம் பிப்பது தொடர்பாக கலந்துரையாடி வருகையில், ஜனாதிபதி சந்திரிகா அரசியல் சூழ்ச்சி மூலம் ஆட்சி யைக் கைப்பற்றினார். அவர் தொடர்ந்து ஆட்சியைத் தக்கவைப் பதையே நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றார். தனது ஆட்சி யைத் தக்கவைப்பதற்காக நாடா ளுமன்ற உறுப்பினர்களை விலை கொடுத்து வாங்குவதையே நோக்க மாகக் கொண்டு காணப்படுகின்றார்.

தமது ஆட்சியினைக் கொண்டு செல்வதற்காக எத்தனையோ தந்திரோ பாயங்களைக் கையாளுகின்றார். நீண்டகாலமாக நாட்டில் நிலவி வரும் இனப் பிரச்சினையைத் தீர்ப் பதற்கான தேவைப்பாடு அரசாங் கத்திடம் இல்லை.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிகளான ஜே.வி.பி சமாதான நடவடிக்கை களை வெளிப்படையாக எதிர்த்து வருகின்றது.

இதனால், சமாதானப் பேச்சுக் களைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாது ஜனாதிபதி திண்டாடுகின் றார். இவ்வாறு சமாதானப் பேச் சுக்களை மீள ஆரம்பிக்காது இழுத் தடிப்புச் செய்வதானது நாட்டினை மீண்டும் ஒரு யுத்தத்திற்குத் தள் ளிச் செல்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத் தினுள் அரசியல் முரண்பாடும் காணப்படுவதே இதற்குப் பிரதான காரணமாகும்.

எதிர்வரும் வருடம் ஜனாதிப தித் தேர்தல் நடத்தப்படவேண்டும். அவ்வாறு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படாவிட்டால் நாங்கள் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் போராட்டத்தினை நடத்துவோம் எனத் தெரிவித்தார்.

இந்த வருடாந்த மாநாட்டில் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய நாடாளு மன்ற உறுப்பினர்களான சமரவிக் கிரம, ஜயந்த கௌந்திலக, பேரா சிரியர் ஜி.எல்.பீரிஸ், மகிந்த சமரசிங்க உட்பட கட்சியின் முக் கிய உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

நேற்று இடம்பெற்ற இந்த மாநாட் டில் ஐ.தே.கட்சியின் அடுத்த தலை வராக மீண்டும் ரணில் விக்கிரம சிங்க தெரிவுசெய்யப்பட்டதுடன். பிரதித் தலைவராக கருஜெய சூரிய வும் பொதுச் செயலாளராக என்.ரி. கே.கே.ஹேரகொடவும், தவிசாள ராக மலிக் சமரவிக்கிரமவும் பொரு ளாளராக விமல் வீரரட்ணவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் எதிர் வரும் ஜனாதி பதித் தேர்தலில் ரணில் விக்கிரம சிங்கவை வேட்பாளராக நிறுத்து வது என்கின்ற தீர்மானம் உட்பட ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் டுள்ளன.


## ஆத்ம சாந்தி கிரியை அழைப்பு



### திருமதி அன்னலட்சுமி மாணிக்கம் (செல்வநாயகம்)

எமது குலதெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 08.12.2004 அன்று கீரிமலையிலும், வீட்டுக்கிரியைகள் 10.12.2004 வெள்ளிக் கிழமை நடைபெறும்.

எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு மதிய போசனத்திலும் பங்கேற்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

2 ஆம் ஒழுங்கை.
கைலாய பிள்ளையார் வீதி. சாவகச்சேரி.
தொ.பே: 0777 852077
07776171545

இங்ஙனம்
ம.குலேந்திரன் (மகன் - லண்டன்)
க.உமாமகேஸ்வரன (அமுது - மருமகன்)
சி.கந்தசாமி (மருமகன் - கனடா)


உலக சந்தையில்

# எரிபொருளின் விலை குறைந்தும் இலங்கையில் மட்டும் அதிகரிப்பு!

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

((கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருட் கள் உட்பட பல பொருட்களின் விலை குறைவடைந்த போதும் தற் போதைய அரசாங்கம் பொருட் களின் விலைகளைக் குறைக்க வில்லை என, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பி னர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் மசகு எண் ணெயின் விலை 22 சதவீதத்தி னால் குறைவடைந்த போதிலும் இலங்கையின் பணவீக்கம் 14 சத வீதத்தினால் அதிகரித்துள்ளது. உலக சந்தையில் மசகு எண்ணெ யின் விலை அதிகரித்ததினால்தான் எரிபொருட்களின் விலை அதிகரித் துள்ளது என அரசாங்கம் தெரிவித் தது.

ஆனால், உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைவடை ந்த பலாபலனை மக்கள் அனுப விக்கவில்லை. உலக சந்தையில் பொருட்களின் விலை அதிகரிக்கு மாயின் இலங்கை மட்டுமல்ல இந் தியா, பங்களாதேஷ் போன்ற நாடு களில் தாக்கத்தை ஏற்படுத்தும் இந்தியாவின் பணவீக்கம் 6 சதவீத மாகவுள்ளது. ஆனால் இலங்கைப் பணவீக்கம் 14 வீதமாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## முப்படைகளின் பலத்தை...

விமானப்படை தனது ஆட் பலத்தை இரண்டு மடங்காக அதி கரித்துள்ள அதேவேளை, புதிதாக 20 விமானங்களைப் பெற்றுள்ளது.

இராணுவம் தனது டாங்கிகளின் தொகையை மும்மடங்காகவும், ஆட்லறிகளின் எண்ணிக்கையை இரண்டு மடங்காகவும் அதிகரித் துள்ளது.

சமாதான காலத்தைப் பயன் படுத்தியே இராணுவம் தனது ஆயுத, கவச, ஆட்லறிப் பலத்தை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடும் புளொட்கெட் மேலும் தெரிவித் துள்ளதாவது -

விமானப்படை 10 புதிய எம்.ஐ 35 தாக்குதல் ஹெலிகளையும், 10 போக்குவரத்து விமானங்களையும் புதிதாக கொள்வனவு செய்திருக்கி றது. இதன்மூலம் விமானப்படை தனது தாக்குதல் ஹெலிகளின் எண்ணிக்கையை 24 ஆக உயர்த்தி யுள்ளது.

இராணுவம் 2001 இல் 97 ஆக இருந்த ஆட்லறிகளின் எண்ணிக் கையை 2002 இல் 187 ஆக அதி கரித்தது. அத்துடன் கவச வாக னங்களின் எண்ணிக்கை சுமார் 70 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது இராணுவத்திடம் 204 கவச வாகனங்கள் உள்ளன. போர் நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப் படுவதற்கு குறுகிய காலத்துக்கு முன்னர் இராணுவம் 40 டாங்கி களை புதிதாக கொள்வனவு செய் திருந்தது.

10 ஆயிரமாக இருந்த விமானப் படையின் ஆட்தொகை 2002 ஆம் ஆண்டு வரை சுமார் இரட்டிப்பாக அதிகரிக்கப்பட்டு 19 ஆயிரத்து 300 பேரைக் கொண்டிருந்தது. அதன்படி விமானப்படை தொடர்ந்தும் போருக் கான தயார்ப்படுத்தலுக்கு ஆட் சேர்ப்புக்களை மேற்கொண்டுவரு கிறது.

2002 இல் இராணுவம், உத்தி யோகபூர்வ தகவல்களின்படி 95 ஆயிரத்திலிருந்து தனது ஆட் தொகையை சுமார் 118 000 பேராக அதிகரித்திருக்கிறது.

ஆனால், படையிலிருந்து தப்பி யோடுவோரால் ஆட்தொகையை அதிகரிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள் ளது. இதனால் இராணுவத்தில் சேர்வோர் தொகை குறைவாகவே உள்ளது. தப்பியோடுவோரை மீள இணைத்துக்கொள்வதன் மூலம் ஆளணியை அதிகரித்துக் கொள் வதில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

போர்நிறுத்த உடன்பாடு கைச் சாத்திடப்படுவதற்கு குறுகிய காலத்துக்கு முன்னர் கடற்படை தன்னை மிகப்பெரியளவில் விரி வாக்கம் செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்து - பேச்சுக்கள் நடை பெறும் போதும் தனது பணியைத் தொடர்ந்தது.

2001 இல் தனது ஆட்தொகை யைக் கடற்படை 80 வீதமாக அதி கரித்து 18 ஆயிரம் பேரைக் கொண் டிருந்தது. 2003 இல் கடற்படை யில் சுமார் 20,600 பேர் உள்ளனர்.

2000 ஆம் ஆண்டில் கடற் படையை பெரியளவில் விரிவாக் கம் செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்தது. புலிகளுக்கு எதிரான போரில் கடற்படை மூலம் முதற்கட் டப் பாதுகாப்பை தேடுவதென்ற தீர்மானத்துடனேயே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்தது.

புலிகளுக்கு ஆயுதங்கள், வெடி பொருட்கள் கிடைப்பதை கடற்படை தடுக்குமேயானால் புலிகளை இரா ணுவம் தோற்கடிக்கும் என்று அரசு கருதியது.

ஆனையிறவு வீழ்ச்சிக்குப் பின் னரும், 2001 ஆம் ஆண்டில் அக்னி தில நடவடிக்கை தோல்வியின் பின்னர் - புலிகளைத் தோற்கடிக்க மேலதிக ஒரு பல சக்தி தேவை என்று இராணுவம் கருதியது.

அதனுடன் ஜெட் விமானங் களால்- வேகமாகவும், தொலை வில் இருந்தும் தாக்குதல் நடத்தப் படுவதால் குறிதவறுவதாக இராணு வத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் இத்தகைய ஜெட் விமானங்களை செலுத்தும் விமானி கள் இலங்கையில் மிகவும் குறை வாகவே காணப்படுகின்றனர்.

இலங்கையில் விமானிகளுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் மட்டுப் படுத்தப்பட்டவையாகக் காணப்படு வதால் பெரும்பாலான விமானிகள் மேலதிக பயிற்சிக்காக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் புதிதாக எம்.ஐ.35 ரக ஹெலிகொப்டர்களை அரசாங்கம் கொள்வனவு செய் திருப்பதானது - இராணுவம் விடுத லைப் புலிகளுக்கு எதிரான யுத்த மொன்றுக்குத் தம்மைத் தயார்ப் படுத்துகின்றது என்பதையே எடுத் துக் காட்டுகின்றது.

தற்போது நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்த உடன்பாட்டின்படி படையினர் தமது முன்னைய நிலைகளுக்கு பின்வாங்கிச் செல்ல வேண்டும். இவ்வாறு பின்வாங்கிச் செல்வது, அவர்கள் அனுபவித்து வந்த சுதந்திரத்தையும், நன்மை களையும் ஒரு எல்லைக்குள் மட் டுப்படுத்திவிடும். இதனால் பெரு பாலான படையினர் பழைய நி[illegible] களுக்குள் முடங்கிக் கிடப்பதை விரும்பவில்லை.

தற்பொழுது அரசாங்கத்திடம் காணப்படும் படைபலமானது- விடு தலைப் புலிகளோடு போரிட்டு நாட் டைக் கைப்பற்றக் கூடிய அள வுக்கு பலம்வாய்ந்ததாக இல்லை.

படையினரின் படைபலமானது ஒழுங்குபடுத்தப்படாத ஒன்றாகவே காணப்படுகின்றது. இது நாட்டுக்கு வெளிநாட்டு அழுத்தங்கள் ஏற்படு வதற்கும் காரணமாக அமைகின்றது.

பாரிய ஆயுத பலத்துடனுள்ள விடுதலைப் புலிகளுடன் போரிடு வதனால் ஆயுத பலத்தை அதி கரித்தேயாகவேண்டும் என அர சாங்கம் சிந்திப்பதை இந்த விமா னக் கொள்வனவு எடுத்துக் காட்டு கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளை போரில் தோற்கடிப்பதென்பது படைத் தரப்பால் இயலாத காரியமாகவு[illegible].

இந்த நாட்டில் தோன்றி[illegible] இனப்பிரச்சினையை படையினர் ஒருபோதும் போரினால் தீர்த்துவிட முடியாது என்பதையே படையின ரின் இந்த இயலா நிலை எடுத்துக் காட்டுகின்றது என்றும் அவர் தனது நூலில் மேலும் தெரிவித்துள்ளார்.

**சர்வதேசத்தால் வெளிப்படுத்தப்பட்ட சகல மனிதனுடைய அடிப் படை உரிமைகளையும். வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் பாதுகாக்கின்றது.**

## பொலிஸ்...

அதிகாரிகள் இந்த விசார ணையில் தலையிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதற்கிடையில் இந்தக் கொலை தொடர்பான விசாரணை அறிக்கை யையும் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் தொடர்பான விபரங் களையும் உடனடியாகச் சமர்ப்பிக்கு மாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழு பொலிஸ் மா அதிபரைக் கேட் டுள்ளது.

## நித்திரைக்கு...

நேற்றுமுன்தினம் இரவு படம்பார்த்து விட்டு வீட்டுக்குச் சென்று உறங் கிய மேற்படி மாணவன் அதிகாலை தாயார் எழுப்பும்போது மரணமான நிலையில் காணப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜே.வி.பியின்...

இதன்போது - இந்தக் கடிதத் துக்கும் அரசாங்கத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. ஜே.வி.பி. வெளியிட்டிருக்கும் கருத்து அர சாங்கத்தின் கருத்தல்ல. ரில்வின் சில்வா அமைச்சரவை உறுப்பினர் கூடக் கிடையாது. ஜே.வி.பி. ஆளும் கூட்டணியின் ஒரு கட்சியே தவிர, அது அரசாங்கம் அல்ல என்றும் கதிர்காமர் தெரிவித்தார்.

## சமாதான...

பேச்சு நடத்தும் திட்டத்துடன் இலங்கைக்கான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பு வர வுள்ளார். மீண்டும் போர் முனைக் குள் நாடு தள்ளப்படுவதைத் தடுப்ப தற்கான தீவிர முயற்சியில் ஈடுபடு வதுடன் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான நடவடிக் கைகளை மேற்கொள்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## மரண அறிவித்தல்

### ஆசீர்வாதம் ஆரோக்கியநாதர்

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஆசீர்வாதம் ஆரோக்கியநாதர் 05.12.2004 நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் ஞானப்பு தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மேரி மாகிறேற் மற்றும் றோசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மாக்கிறெட் (முத்து) இன் அன்புக் கணவரும், தேவதாஸ், குமாரன், புஸ்பராணி (தவமணி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லக்கிளி, மீரா, காலஞ்சென்ற பெனடிற் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 06.12.2004 (இன்று) பிற்பகல் 3.00 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை*

தகவல் :
குடும்பத்தினர்


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.